



அறைவு 02 இயம் 34 April 12 - April 18, 2014


உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்



T20 உலகக் கிண்ண வெற்றியாளர்கள்

# கடத்தல் முயற்சி தோல்வி



திருகோணமலையில் 3ம் கட்டை அலஸ்தோட்டத்தைச் சேர்ந்த 12வயது மாணவனை கடந்த சனிக்கிழமை இனந்தெரியாத "வெள்ளைவான்" மனிதர்கள் கடத்திச் செல்ல மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியடைந்துள்ளது.

பெரும் அதிர்வை ஏற்படுத்தியுள்ள இந்தக் கடத்தல் நாடகம், மாணவன் தப்பியோடி தம்பலகாமம் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் ஒருவரின் வீட்டைச் சென்றடைந்ததுடன் முடிவிற்கு வந்துள்ளது.


எனினும் விசாரணைகளை முன்னெடுத்துள்ள காவல்துறையால் தற்போதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.


அங்கிருந்து கிடைக்கும் செய்திகளின் படி கடந்த சனிக்கிழமை மாலை 3 மணி வகுப்புக்காக தனது தங்கையுடன் சென்ற இந்த மாணவனை அவர்களுக்குப் பின்னால் வந்த வெள்ளை நிற வானில் இருந்தவர்கள் அலாக்காகத் தூக்கி எடுத்துள்ளனர். தங்கை முன்னே சென்றதால் அதனைக் கவனிக்கவில்லை. 4 மணியளவில் குறித்த மாணவன் வகுப்புக்களுக்குச் சமூகம் 13


# மேலும் பலர் தடைப்பட்டியலில் ?

விடுதலைப் புலிகளின் புலம்பெயர் கட்டமைப்பில் இரண்டாம் நிலைத் தளபதியாக விளங்கிய நந்தகோபன் எனப்படும் கபிலன் கைது செய்யப்பட்டதை அடுத்து தென்கிழக்காசிய நாடுகளில் விடுதலைப் புலிகளின் கட்டமைப்புடன் தொடர்புடைய மேலும் பல இலங்கையர்களின் பெயர்கள் தடைப்பட்டியலிடப்படலாம் என எதிர்கூறல்கள் வெளியாகியுள்ளன.

போலிக் கடவுச்சீட்டுடன் கடந்த மார்ச் மாதம் 6ம் திகதி மலேசியாவில் இருந்து தெஹ்ரான் ஊடாக ஐக்கிய அரபு இராச்சியத்திற்குப் பயணித்த நந்தகோபனின் நகர்வுகள் தொடர்பாக அறிந்து கொண்ட சர்வதேசப் புலனாய்வுத்துறை அவரை தெஹ்ரானில் தடுத்து நிறுத்தி மலேசியாவிற்கு நாடு கடத்தியது. அதேவேளை அத்தகவலைப் பெற்றுக்கொண்ட 13


கபிலன் (படம். டி.பி.எஸ்.ஜெயராஜ்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

# சர்வதேச விசாரணையில் தமிழர்களின் நிலைப்பாடு

சர்வதேச விசாரணைக்கான குழுவை அடுத்த மாதமளவில் அமைக்க ஐக்கியநாடுகள் மனித உரிமைச் சபையின் ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார் என்ற செய்தி வெளிவந்துள்ளது.

இவ் விசாரணைக்குச் சாட்சியம் அளிப்பவர்களின் பெரும் பகுதியினர் ஈழத்தமிழர்களாகவே இருக்கப்போகின்றார்கள்.

அவர்களில் நாட்டிலுள்ள தமிழர்களும் புலம்பெயர் தமிழர்களும் உள்ளடக்கம். அத்துடன் நாட்டை விட்டுத் தப்பிச்சென்றுள்ள சுதந்திர ஊடகங்களைச் சேர்ந்த சிங்கள மக்களும் ஒரு தரப்பாக உள்ளடக்கப்படப் போகின்றார்கள்.

இவ்வாறு சாட்சிசொல்ல முன்வருபவர்கள் அனைவரையும் அரசு "துரோகிகள்" பட்டியலில் இணைத்துள்ளது.

துரோகிகள் என்ற சொல்லானது அதற்கான தண்டனையையும் தன்னகத்தே ஒளித்து வைத்திருப்பதைத் தமிழ் மக்கள் அனைவரும் அறிவார்கள். உலக சரித்திரத்திலும் சரி தற்போதைய ஆசிய ஆபிரிக்க நாடுகளிலும் சரி துரோகிகள் என முத்திரை குத்தப்படுபவர்களின் ஆயுள் என்றும் கெட்டியானதாக இருந்ததில்லை. அதுதான் அப்பெயருடன் நிழலாக இருக்கும் தண்டனை... மரணம்....

அவ்வாறு சாட்சி வழங்கவிருக்கும் தரப்பினரை முன்னரேயே பயமுறுத்துவதற்காகவோ என்னவோ உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள தமிழர்களை நோக்கி அரசு தனது இரும்புக்கரத்தை நீட்டியுள்ளது.

உள்நாட்டில் தமிழ்மக்களின் கைதுகளும், வெளிநாட்டில் வாழும் மக்களின் பெயர்களை நாட்டுக்குள் உள்வரத் தடை விதித்ததும் அவ்வகைப் பயமுறுத்தலின் வடிவமொன்றாகவும் பார்க்கப்படுகின்றது.

இவ்விரு விடயங்கள் தொடர்பாகவும் எந்தச் சர்வதேச நாடும் இப்போதுவரை பேசவில்லை என்பதே பெரும் கேள்விக் குறியை ஏற்படுத்தியுள்ளது.

மனித குலத்திற்கு எதிரான சர்வதேச விசாரணையொன்றை ஐக்கிய நாடுகள் சபையில் முன்னெடுத்தமைக்கு அடித்தளமாகத் தமிழ்மக்களின் எவ்வித நடவடிக்கையும் அமையவில்லை என்பதே உண்மை. அவ்வாறு முன்னெடுத்தமைக்கு எமது நடவடிக்கைகள் பக்கபலமாகக் கூட அமையவில்லை. ஆனால் மற்றொரு அல்லது பலவகையான சர்வதேசக் காரணிகளே இலங்கைக்கு எதிராக அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் போர்க்கொடி தூக்கக் காரணமாக அமைந்திருக்கின்றன.

ஆனால் அப்போர்க்கொடிக்கான வலுவான ஏதுவாக எமது மரணங்களும் அதன் எண்ணிக்கையும், சனல் 4 நிறுவனத்தின் காணொளிகளும் அமைந்துவிட்டன. அதை போர்செய்த அரசு தான் ஏற்படுத்தியும் கொடுத்திருந்தது.

இலங்கைக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியது சர்வதேச நாடுகளிற் சில. இலங்கைக்கு ஆதரவாகக் களம் குதித்த நாடுகள் சில. அருகிலிருந்தும் அமைதியாயிருந்தது காந்திய தேசம். இம் மும்முனைப் போட்டியில் உருட்டப்படுவது........ நாங்கள்...... ?

ரி20 போட்டியில் இலங்கை இந்தியாவை வென்றவுடன் தமிழர் பிரதேசங்களில் சகோதர இனத்தவரால் மேற்கொள்ளப்பட்ட களியாட்டங்களில் எம் மீதான காழ்ப்புணர்வும் சிறிது கலந்திருந்தது. ஆனால் இந்தியாவோ ஐநாவில் அமைதியாய் இருந்தது.

இவையெல்லாம் சுட்டி நிற்பது என்ன? எங்களின் நிம்மதியான வாழ்வு சர்வதேசப் பரப்பில் எங்கோ ஊசலாடிக் கொண்டிருப்பதையா?

# விளைநிலங்களில் வீடு கட்டத் தடை கடுமையாகும்



வளமான விளை நிலங்களில் வீடுகள் கட்டுவதைத் தவிர்ப்பது முக்கியம் என நாடாளுமன்றத்தில் சபாநாயகர் சாமல் இராசபக்ச தெரிவித்துள்ளார்.

இதனைத் தடுப்பதற்குக் காணிமீட்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் செய்வது தொடர்பாகக் கூடியளவு கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். அத்துடன் விளைநிலங்களையும் வயல்காணிகளையும் வீட்டு நிலங்களாக மீட்பது சட்டவிரோதமானதாக இருந்தாலும் அதனைப் பலர் செய்கின்றார்கள் என்று தெரிவித்த சபாநாயகர் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைத் தடுப்பதற்கு அவசர தொலைபேசி இலக்கமொன்றைச் செயற்படுத்துவது தொடர்பாக ஆலோசிக்குமாறும் காணி விவசாயத்துறை அமைச்சரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# இரவில் ஒளிரப்போகும் மிதிவண்டிகள்

மிதிவண்டிகளில் இரவு வேளைகளில் பயணம் செய்வோர் பெருமளவில் விபத்துக்களில் சிக்கிவருவதைத் தடுக்கும் தேசிய செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதன்படி மிதிவண்டிகளில் ஒளிரும் பல்வர்ண ஒட்டிகளை ஒட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பலவர்ண ஒட்டிகள் (ஸ்ரிக்கர்) இரவில் ஒளித்தெறிப்பினை ஏற்படுத்தி ஒளிரக்கூடியவையாக இருப்பதால் ஏனைய வாகன ஓட்டிகள் மிதிவண்டிகளை இலகுவாக அடையாளம் காண முடியும் என இத்திட்டத்தை முன்நின்று செயற்படுத்தவுள்ள போக்குவரத்து அமைச்சும் வீதிப் பாதுகாப்பு தேசிய மன்றமும் தெரிவித்துள்ளன.

# புல்மோட்டையில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி

(பஹ்மி யூஸுப்)



புல்மோட்டை பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் பற்றி நேரில் கண்டறிவதற்கான விஜயம் ஒன்றினை நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைமைத்துவ சபை உறுப்பினர்கள் கடந்த வியாழக்கிழமை (03.04.2014) அப்பகுதிக்கு மேற்கொண்டனர். இச்சந்திப்பில் மீனவர்கள் சமூகத்தின் பிரதிநிதிகளாக சுமார் 50ற்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்டனர்.

கொக்கிளாய் ஏரியில் கடந்த மூன்று பரம்பரையாக தாம் மேற்கொண்டு வரும் மீன்பிடித் தொழிலினை செய்ய முடியாத வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சூழ்நிலைகளை விபரித்த மீனவர்கள்,. கொக்கிளாய் ஏரியில் மீன்பிடித் தொழிலினை மேற்கொள்வதற்காக 1981ம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் மூலம் தாம் உட்பட ஏரியைச் சூழவுள்ள ஐந்து கிராமங்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டிருந்ததாகவும், யுத்த காலங்கள் உள்ளிட்ட கஸ்டமான காலங்களிலும்கூட தாம் இன்று எதிர்கொள்வது போன்ற தொழில் இழப்புக்களைச் சந்திக்கவில்லை என்றும் தெரிவித்தனர்.கொக்கிளாய் ஏரியில் இயந்திரம் பூட்டப்பட்ட படகுகளை முஸ்லிம் மீனவர்கள் பயந்படுத்தக்கூடாது என்ற தடை மிகக் கடுமையாக அமுல் படுத்தப்படுகின்ற போதிலும்கூட ஏனையவர்கள் இயந்திரப்படகுகளை ஏரிப்பகுதியில் மிகச் சுதந்திரமாகப் பயன்படுத்துவதினை தலைமைத்துவக் குழுவினர் நேரில் கண்டனர்.

தொடர்ந்து ஹபீர் பள்ளிவாயலில் நடைபெற்ற கலந்துரையாடலில் பல்லாண்டு காலமாகக் காடு வெட்டி, குடியிருந்து, பயிர்ச் செய்கைகளை மேற்கொண்டு வந்த பலநூறு ஏக்கர் காணிகள் அரச காணிகள் எனக் கூறப்பட்டு தம்மிடமிருந்து பறிக்கப்பட்டு தாம் விரட்டியடிக்கப்பட்டதாகவும், இதில் பெருந்தொகையான ஏக்கர் காணிகள் பாதுகாப்புப் படைகளால் கையகப்படுத்தப்பட்டிருப்பதாகவும் பொதுமக்கள் முறையிட்டனர். அது மாத்திரமன்றி அரச தரப்பினர்களால் வழக்குகள் பலவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் எந்தவொரு உயர்மட்ட முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளும் தலையிட்டு தமக்காகப் பேசி தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கவில்லை எனவும் தமது விரக்தியினை வெளிப்படுத்தினார்கள்.

# திருகோணமலையில் ஸ்ரீசண்முகா மகளிர் கல்லூரி சாதாரண தரப் பெறுபேறுகளில் முதலிடம்


2013ம் வருடம் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரம் பரீட்சை முடிவுகள் கடந்த வாரம் வெளியாகின. திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் 17பேர் சகல பாடங்களிலும் ஏ தரச் சித்திகளைப் பெற்றுள்ளனர். .இப்பாடசாலையைச் சேர்ந்த 15 மாணவிகள் 8ஏ சித்திகளையும் பெற்று மாவட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைத் தந்த முதல் பாடசாலையாகப் பதிவாகியுள்ளது.

அனைத்துப் பாடங்களிலும் ஏ தர சித்திகளைப் பெற்ற மாணவிகளின் படங்களைக் காணலாம். (கதிரவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனந்தியைத் "துரோகியாக்கும்" துண்டுப்பிரசுரங்கள் கிழக்கில்



வடமாகாண சபையின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் அனந்தி சசிதரனின் சுயரூபம் உங்களுக்கு தெரியுமா? என்ற தலைப்பில் கிழக்கில் சில இடங்களில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

வட தமிழ் அமைப்பினரால் உரிமை கோரப்பட்டுள்ள அந்த துண்டுப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

திருகோணமலை மாவட்ட எல்.ரீ.ரீ.ஈ அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் எனப்படும் சின்னத்துரை சசிதரனின் மனைவிதான் அனந்தி. கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் தலைமை லிகிதராகக் கடமையாற்றிய இவர் தற்போது அரசியலுக்குள் புகுந்து குறுகிய காலத்திற்குள் சர்வதேசத்தைத் தன்பக்கம் திருப்புவதற்காக புலிகள் வலையமைப்பின் திட்டத்திற்கு அமைவாக செயற்படுவதை நீங்கள் அறிவீர்களா ?

இவர் வெளிநாட்டு புலி ஆதரவு அமைப்புக்கள், சில புலம்பெயர் தமிழ்க் குழுக்கள், மீண்டும் புலிகள் தலையெடுப்பதற்கு உதவும் அமைப்புக்கள், மற்றும் மறைந்து வாழும் புலித் தலைவர்களின் உதவியோடு கூட்டமைப்பு சார்பாக வட மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு வென்றதை நீங்கள் அறிவீர்களா ?

இவர் அரசியல் பலத்தைப் பெற்றவுடன் தமிழ்க் கலாசாரத்திற்கு ஒவ்வாத டெனிம் மற்றும் ரீ சேர்ட் அணிந்து கொண்டு புலிகளின் தேவைக்காக கனடா, ஜேர்மன், டென்மார்க், நோர்வே மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் சுற்றுவதை நீங்கள் அறிவீர்களா ?

அங்கு செல்லும் போதெல்லாம் அவர் புலிகள் அமைப்பைச் சந்தித்துள்ளார். இவ்வமைப்புக்களுக்கு முறையான தலைமைத்துவம் இல்லையென்பதினால் தனது ஆதரவுடன் மறுபடியும் புலிகளின் அரசியல் அபிலாஷைகளை சர்வதேச அரங்கில் கொண்டு செல்ல முயற்சிக்கின்றார்.

இந்த நோக்கத்திற்காக சட்டவிரோதமாகவும் மற்றும் கப்பம் மூலமும் புலிகளினால் சேர்க்கப்பட்டு இன்று வரை பகிரங்கப்படுத்தப் படாமல் இருக்கும் பணம் அனந்திக்குக் கொடுக்கப்படுகின்றது.

அனந்தி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் தலைமை லிகிதராகக் கடமையாற்றியபோது இவர் புலிகளின் உள்ளகப் புலனாய்வுப் பிரிவுக்கு அங்குள்ள அரச அலுவலர்கள் பற்றிய தகவல்களை வழங்கியது உங்களுக்குத் தெரியுமா?

இறுதி யுத்தத்தின் போது இரட்டை வாய்க்காலில் நின்ற பொதுமக்களிடம் இராணுவப் பாதுகாப்புப் பிரதேசத்திற்கு அனுப்புவதாகக் கூறி பணம் பெற்றுக் கொண்ட இவருடைய கணவர் அப்பணத்தை அனந்திக்குக் கொடுத்து அனந்தி உட்பட பிள்ளைகள் மூவருடன் மேலும் ஆறு பேரைச் சேர்த்து டொல்பின் வானில் ஏற்றி ராணுவத்தினரிடம் சரணடைவதற்காக அனுப்பி வைத்ததை நீங்கள் அறிவீர்களா ?

புலிகள் அமைப்பில் சிறுவர்களை கட்டாயமாகப் போரில் சேர்த்துக் கொள்ளும் பகுதிக்குப் பொறுப்பாக அனந்தியின் கணவர் எழிலன் இருந்தார்.

வலைஞர் மடம் செபமாலை மாதா ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்த 300 இற்கும் மேற்பட்ட சிறுவர் சிறுமியரைக் கடத்திச் சென்றது இவரது கணவர் எழிலன்தானே !!

அவ்வேளை செல்ல மறுத்த சிறுவர்கள் 4 பேரை அவ்விடத்திலேயே துடிதுடிக்க சுட்டுக் கொன்றது அனந்திக்கு நன்றாகத் தெரியும். இவ்வாறு கடத்திச் செல்லப்பட்ட சிறுவர் சிறுமியர் இன்று எங்கே உள்ளனர் ? இதற்கு சர்வதேச விசாரணை தேவையில்லையா ?

தனது குழந்தைகளுக்குத் தேவையான பாலுணவைப் பெற்றுக் கொள்ள இராணுவப் பாதுகாப்பு வலயத்திற்குச் செல்ல அனுமதி கேட்ட இரு குழந்தைகளின் தாயை குழந்தைகளின் கண்முன்னாலேயே தனது பிஸ்டலினால் தாயின் தலையில் சுட்டதை நீங்கள் அறிவீர்களா?
எனவே தனது கணவரின் குரூர செயற்பாடுகளைப் பற்றி அனந்தி அறிந்திருக்கவில்லையா ?

வடக்கில் வாழும் பெற்றோர்களிடம் புலிகளினால் கடத்தப்பட்ட சிறுவர்களின் கதி குறித்து அனந்தி எப்போதாவது பேசியதுண்டா ? கடத்தப்பட்ட கணவர்மார் பற்றி அவர்களது மனைவியரிடம் அனந்தி பேசியதுண்டா? இதற்கும் ஒரு சர்வதேச விசாரணை தேவையென்று அனந்தி ஏன் கோரவில்லை.? இவர் உண்மையில் தமிழ் சமூகத்திற்காக குரல் கொடுக்கின்றாரா என்று யோசித்துப் பாருங்கள் என்றும் அந்த துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவுத் தகவல்களின் அடிப்படையிலேயே தடை

சர்வதேச நாடுகளில் இயங்கிவந்த தமிழர் அமைப்புக்கள் 16ம் விடுதலைப் புலிகளுடன் தொடர்பினைக் கொண்டிருந்தார்கள் என்பதால் நாட்டுக்குள் வரத் தடை செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான புலம்பெயர் தமிழர்களின் விபரங்களும் தமக்கு முல்லைத் தீவில் இருந்து கிடைத்த ஆவணங்கள் ஊடாகவே பெற்றுக்கொள்ளப்பட்டது என சிரேட்ட புலனாய்வு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இறுதியுத்தம் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் இருந்தும் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் இயங்கிய இடங்களில் இருந்தும் கைப்பற்றப்பட்ட பெருமளவிலான தகவல்களின் அடிப்படையிலேயே இந்தடை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

பணம் திரட்டப்பட்ட விதங்களும் அவை இலங்கைக்கு எவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டன என்ற விபரங்களும் தெளிவாக விடுதலைப் புலிகளின் தலைமையகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஆவணங்களில் இருந்து அறியக் கிடைத்தது.

இவ்வாறு பெயரிடப்பட்ட யாரும் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதாகக் கருதினால் இலங்கைக்கு வந்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (சண்டே டைம்ஸ்)

# மரணமாகும் இலங்கையரின் உறுப்புக்கள் மாயம்

மத்திய கிழக்கு நாடுகளில் உயிரிழக்கும் இலங்கையரின் உடல்களில் இருந்து முக்கியமான உறுப்புக்கள் களவாடப்படுவதாக நேற்றைய பாராளுமன்றத்தில் கதைக்கப்பட்டுள்ளது.

உடற்பாகங்கள் அகற்றப்படுவது தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, கடந்த புதன்கிழமை (09) நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்து உரையாற்றும் போது அமைச்சர் டிலான் பெரேரா மத்திய கிழக்கு நாடுகளில் உயிரிழக்கும் இலங்கையர்களின் உடற் பாகங்கள் அகற்றப்பட்டிருந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும் என்றார். அத்துடன் இச்சம்பவம் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இவை தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், மேற்படி குற்றச்சாட்டு இன்னமும் நிரூபிக்கப்படவில்லை என்றும் அமைச்சர் டிலான் பெரேரா குறிப்பிட்டார்.

மேலும் "இயற்கை மரணங்கள் தொடர்பில் உறவினர்கள் சந்தேகம் வெளியிடும் பட்சத்தில் அந்நாடுகளில் சடலங்கள் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டே இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இவ்வாறு பிரேத பரிசோதனை செய்யும் போது, உடலிலிருந்து அகற்றப்படும் சில பாகங்கள் மீண்டும் பொருத்தப்படாமல் போவதாலேயே இந்த பிரச்சினை எழுந்துள்ளது" என்றும் டிலான் பெரேரா கூறினார்.

(சண்டே டைம்ஸ்)

# பிரிமா நிறுவனத் தீயைக் கட்டுப்படுத்திய வான்படை

திருகோணமலை, சீனக்குடாவிலுள்ள பிரிமா நிறுவனத்தின் புதிய தொழிற்சாலைக்கான கட்டடத்தில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அத் தீயை இலங்கை விமானப்படையின் தீயணைப்பு பிரிவினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மின்னொழுக்கு காரணமாகவே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# நவக்கிரக நிர்மாணம்

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் ஆலங்கேணி விநாயகர் ஆலயத்தில் நவக் கிரக சிற்பங்களை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வொன்று கடந்த புதன்கிழமை (9) இடம்பெற்றது.

இவ் நவக்கிரக சிற்பங்களை நிர்மாணிப்பதற்கான நிதியுதவியை ஆலங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட நலன் விரும்பியொருவர் நன்கொடையாக வழங்கியிருந்தார்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் ரீ.கௌரிராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கலந்துகொண்ட கிண்ணியா பிரதேச செயலாளர் கிருஷ்னேந்திரன் இதற்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

இந் நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கே.கோணஸ்வரன், சமாதான நீதிவான் கே.ரவிச்சந்திரன், ஊர் பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கடதாசி ஆலையின் வாகனங்களைக் கைப்பற்றியது நீதிமன்றம்

வாழைச்சேனை கடதாசி ஆலையில் கடமைபுரிந்து தங்களுக்கான பணிக்கொடை கிடைக்கவில்லை என்று மட்டக்களப்பு தொழில் திணைக்களத்தில் 48 பேர் முறைப்பாடு செய்திருந்தனர்.

அம்முறைப்பாட்டையடுத்து, தொழில் திணைக்களத்தினால் வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் அடிப்படையில், ஓர் ஊழியருக்கான பணிக்கொடை தொகையான ஐந்து லட்சத்தி நாற்பத்திரெண்டாயிரம் ரூபாவினை செலுத்துமாறு அறிவித்திருந்தும் அத்தொகை செலுத்தப்படாததால் இன்று இரண்டு வாகனங்கள் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இன்றிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் குறித்த பணத்தினை வாழைச்சேனை கடதாசி ஆலை நிர்வாகம், நீதிமன்றத்தில் செலுத்தி வாகனங்களை மீளப் பெற்றுக்கொள்ள முடியும். இல்லையேல் வாகனங்கள் ஏலத்தில் விடப்பட்டு குறித்த நபரின் பணிக்கொடை நிதி செலுத்தப்படும் என்று தொழில் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**உண்மையை உலகுக்குச் சொல்லக் கூடிய பத்திரிகையாளர்கள் திருகோணமலையில் தேவை - 075 4252042**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடை வெல்லுமா?

கே. சஞ்சயன்

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் 2001ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட 1373 தீர்மானத்துக்கு அமைவாக, வெளிநாடுகளில் செயற்படும் விடுதலைப் புலிகள் மற்றும் அவர்கள் சார்பு புலம்பெயர் தமிழர் அமைப்புகளான 16 அமைப்புக்களை அரசாங்கம் வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகளாக பிரகடனம் செய்துள்ளது.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டுவரப்பட்ட பின்னணியில் தான் இந்த எதிர் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. ஆனால், அரசாங்கம் சொல்லும் காரணம் அதற்கு முரணானது.

இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு மீள உயிர் கொடுக்க வெளிநாடுகளில் உள்ள புலிகள் சார்பு அமைப்புகள் முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டியே அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் அமெரிக்காவினால் விவாதத்துக்கு விடப்பட்ட பின்னர், வடக்கில் புலிகளைத் தேடும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.

அரச படையினரின் இந்தத் தேடுதல்கள், சுற்றிவளைப்புகள், கைதுகள், கெடுபிடிகள் எல்லாமே வடக்கில் போர்க்காலத்தை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது. கிழக்கிலும் அந்த நிலை மெல்ல மெல்ல உருவாக்கப்பட்டு வருகிறது.

புலிகள் இயக்கத்துக்கு மீண்டும் உயிர்கொடுக்க முயன்றவர்கள் என்று சிலரைத் தேடும் நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன.

பலர் கைதுசெய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள நிலையிலும், எவ்வாறு புலிகள் இயக்கத்தை தோற்றுவிக்க முயன்றார்கள் என்றோ அதன் மூலம் எதைச் சாதிக்க முயன்றார்கள் என்ற நம்பகரமான எந்தத் தகவல்களையும் அரசாங்கம் வெளியிடவில்லை.

வடக்கில் தொடர்ந்து படைகளை நிலை நிறுத்தி வைத்திருப்பதற்கு வலுவான காரணம் ஒன்று தேவைப்படுவதாலேயே, இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக பரவலான கருத்துகள் உள்ளன.

இவையெல்லாம் வெறும் ஜெனீவாவை வைத்து மேற்கொள்ளப்படும் நகர்வுகளாகவே பார்க்கப்பட்டு வந்த நிலையில், இதனை ஒரு சர்வதேச விவகாரமாக அரசாங்கம் மாற்றத் தொடங்கியுள்ளதைக் கவனிக்கலாம்.

அதாவது வடக்கில் அதிகரிக்கப்பட்டுள்ள பாதுகாப்புக் கெடுபிடிகளை வெறுமனே வடக்கில் படைகளைத் தக்கவைத்துக் கொள்வதற்கான நகர்வாக மட்டுமன்றி, அதற்கு அப்பாற்பட்டதாகவும் அரசாங்கம் கொண்டு சென்றுள்ளது.

வடக்கில் புலிகள் மீண்டும் தலையெடுக்கத் தொடங்கியுள்ளனர் என்பதை வெறும் பிரசாரமாக நியாயப்படுத்திக்கொண்டிருக்காமல், சர்வதேச அளவில் ஒரு பிரகடனமாக மாற்ற அரசாங்கம் முயன்றுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில், இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவும் கூட, பல சந்தர்ப்பங்களில் புலிகள் இயக்கம் மீண்டும் தலையெடுக்க முனைவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இது புலிகள் இயக்கத்தை வைத்து அரசாங்கம் சர்வதேச அளவில் மீண்டும் அரசியல் செய்யத் தொடங்கிவிட்டது என்பதை உறுதிப்படுத்தியிருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அது தலையெடுக்க முனையும் புலிகளுக்கும் அவர்களின் ஆதரவுச் சக்திகளுக்கும் ஊக்குவிப்பாக இருக்கும் என்று ரவிநாத் ஆரியசிங்க குறிப்பிட்டதை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தம்.

இது புலிகள் மீண்டும் உருவாக இடமளித்து விடாதீர்கள் என்றும் உறுப்பு நாடுகளுக்கு மறைமுகமாகச் சொல்லப்பட்ட செய்தி என்பதை மறுக்க முடியாது.

போர் முடிவுக்கு வந்து ஐந்து ஆண்டுகளாகி விட்ட நிலையில், அரசாங்கம் உருவாக்கிய அமைதியைக் குலைக்கும் எந்தவொரு வன்முறைச் சம்பவங்களும் நடந்திராத நிலையில், திடீரெனத் தோன்றியுள்ள இந்தச் சூழலின் அடிப்படையை சர்வதேச நாடுகள் அதிகம் புரிந்திருக்க வாய்ப்பில்லை.

ஆனால், மூன்று தசாப்தகால போருக்குள் இருந்து மீண்டுள்ள இலங்கை இன்னொரு போர்ச் சகதிக்குள் சிக்கிக் கெள்வதை எந்தவொரு நாடும் விரும்பாது என்பது மட்டும் உறுதி.

அமெரிக்கத் தீர்மானத்தை தோற்கடிப்பதற்கு இது கைகொடுக்கும் என்று அரசாங்கம் கருதியது. எனவே தான், புலிகளைக் காட்டி ஜெனீவாவில் அரசாங்கம் தன்னைச் சமாளித்துக்கொள்ளப் பார்த்தது. ஆனால், அந்த முயற்சி வெற்றியளிக்காத நிலையில் இரண்டாவது கட்ட நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

இப்போது, அரசாங்கம் வீசியுள்ள தடை என்ற பாசக்கயிறு தனியே புலிகளின் எச்சங்களாக இருக்கும் சிலரையும் புலிகள் ஆதரவு அமைப்புகளையும் தான் குறிவைக்கிறது என்று கருதினால் அது தவறானது.

ஏனென்றால், இது ஒரு பரந்தளவிலான இராஜதந்திரத்துடன் கூடிய நகர்வு என்பதை மறந்து விடலாகாது.

கிட்டத்தட்ட கலாநிதி றொகான் குணரத்ன போன்றவர்கள் தான் இதன் மூளையாக செயற்பட்டிருக்க வாய்ப்புகள் உள்ளன.

புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் அமைப்புகளைத் தோற்கடிக்காதவரை புலிகளுக்கு எதிரான போரில் அரசாங்கம் நிரந்தரமான வெற்றியைப் பெற்றுவிட்டதாக கூறமுடியாது என்பது தான், கலாநிதி றொகான் குணரத்ன போன்றவர்களின் நிலைப்பாடு.



அதற்கமையவே, விடுதலைப் புலிகளை சர்வதேச அரங்கில் எவ்வாறு ஓரம்கட்டி ஒழித்துக் கட்டியதோ அதுபோலவே, புலம்பெயர் தமிழர் அமைப்புகளையும் ஒழித்துக் கட்டுவதற்கு அரசாங்கம் இந்த நகர்வில் இறங்கியுள்ளது.

இது இலங்கை அரசியலில் போர்க்கால மீறல்களுக்குப் பொறுப்புக்கூறும் விவகாரங்களில் புலம்பெயர் தமிழர்கள் செலுத்திவரும் செல்வாக்கை அடியோடு பெயர்த்தெடுப்பதற்கான முயற்சி என்பதில் சந்தேகமில்லை.

போரில் வெற்றி பெற்ற அரசாங்கத்தால், தமிழர்களுடன் ஒரு நிரந்தர இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை. இதற்குக் காரணம் புலம்பெயர் அமைப்புகளே என்ற கருத்து அரசாங்கத்திடம் ஊறிப்போயுள்ளது.

உள்நாட்டில் தமிழர் அரசியலில் புலம்பெயர் தமிழர்களின் செல்வாக்கும் அதிகமென்றே கூறலாம். அதற்கு அவர்களிடம் உள்ள நிதிவளமும் ஒருகாரணம். ஆனால், எல்லா வேளைகளிலும் உள்நாட்டிலுள்ள தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிப்பவர்களாக புலம்பெயர் தமிழர்கள் இருப்பதாக கூறமுடியாது.

குறிப்பாக வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் புலம்பெயர் தமிழர்கள் முழுமையாக ஒத்துப்போயினர் என்று கூற முடியாது. ஆனால், தேர்தல் முடிவு புலம்பெயர் தமிழர்களை கூட்டமைப்பை நோக்கி ஒன்றிணைத்து விட்டது.

உள்ளூர் தமிழ் அரசியல்வாதிகள் பலரும் புலம்பெயர் தமிழர்களின் ஆதரவைத் தக்கவைத்துக் கொள்வதில் கவனம் செலுத்தி வந்தனர் என்பதை மறுக்க முடியாது.

ஏனென்றால், அவர்களின் அரசியல் எதிர்காலத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் அரசியல் கொள்கைகளை வலுப்படுத்திக்கொள்வதற்கும் வெளிநாட்டுப் பயணங்களுக்கும் அந்த ஆதரவு அவர்களுக்கு அவசியமாகத் தேவையானது.

முக்கியமான 16 புலம்பெயர் தமிழர் அமைப்புகள் பயங்கரவாத அமைப்புகளாக அரசாங்கத்தினால் பட்டியலிடப்பட்டுள்ள நிலையில், உள்நாட்டு தமிழ் அரசியல்வாதிகளால் இந்த அமைப்புகளுடன் இனிமேல் எந்தத் தொடர்பையும் வைத்துக் கொள்ளவோ, அவற்றிடம் இருந்து உதவிகளைப் பெறவோ முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய பிரமுகர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அரச எதிர்ப்பு பிரசாரங்களில் ஈடுபடுவதையும் கூட இந்தத் தடை முடிவுக்கு கொண்டு வரும் என்று அரசாங்கம் எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது.

அண்மைக் காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி மாகாணசபை, உள்ளூராட்சி உறுப்பினர்களும் கூட ஜெனீவா போன்ற வெளிநாட்டுத் தலை நகரங்களுக்கு செல்லத் தொடங்கியுள்ளனர்.

ஜெனீவாவில் நடந்த ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில், மாகாணசபை உறுப்பினர்கள் அனந்தி சசிதரன், சிவாஜிலிங்கம், வலிவடக்கு உள்ளூராட்சிசபை உறுப்பினர் சஜீவன் போன்றோர் அரசாங்கத்துக்கு எதிரான உரைகளை நிகழ்த்தியிருந்தனர். இதுவும் அரசாங்கத்துக்கு ஒரு தொந்தரவாக மாறியிருந்தது.

இத்தகைய எதிர்ப்புப் பிரசாரங்களுக்கு முடிவு கட்ட வேண்டும் என்றால், இவர்களுக்குப் பின்புலமாக உள்ள புலம்பெயர் தமிழர்களுடன் கொண்டுள்ள உறவுகளைத் துண்டிக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதியது.

அதாவது எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது தானாக அடங்கும் என்ற கோட்பாடு தான் இங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது.

போர்க்குற்றங்களுக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறியாக வேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்கும் இந்த புலம்பெயர் அமைப்புகள், அமெரிக்காவினது இப்போதைய தீர்மானத்தினால் திருப்தி கொள்ளவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

இந்தக் கடும்போக்கு வாதமும் கூட அரசாங்கம் கடும் நடவடிக்கையில் இறங்குவதற்குக் காரணமாக இருந்தது.

என்னதான் அரசாங்கம் ஜெனீவா தீர்மானத்துக்கும் இந்தத் தடைக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று நியாயம் கூறினாலும், உண்மை என்னவோ அதுவாகவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெனீவாவில் அரசாங்கம் பந்தாடப்படுவதற்கு முக்கிய காரணம் புலம்பெயர் தமிழர் அமைப்புகளே என்று அரசாங்கம் கருதுகிறது.

கனடா, பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகளில் உள்ளூர் அரசியலிலும் செல்வாக்குச் செலுத்தத்தக்கவர்களாக மாறத் தொடங்கியுள்ள புலம்பெயர் தமிழர்கள், தமது அரசியல் பலத்தை இலங்கை அரசுக்கு எதிராகத் திருப்பி விடத் தொடங்கியுள்ளனர். குறிப்பாக இலங்கை மீதான பொறுப்புக்கூறல் அழுத்தங்கள் தீவிரமடைந்ததற்கு இதுவும் ஒரு காரணம்.

குறிப்பாக ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை வெற்றி பெற வைப்பதற்காக தடைசெய்யப்பட்ட இந்தப் புலம்பெயர் அமைப்புகள் பலவும் வெளிப்படையான இராஜதந்திர முயற்சிகளில் ஈடுபட்டன.

இவையெல்லாவற்றையும் மனதிற்கொண்டே இந்தத் தடையின் மூலமாக அரசாங்கம் ஒட்டுமொத்த புலம்பெயர் அமைப்புகளையும் நசுக்க முனைகிறது.

இதற்குள் தீவிரப்போக்குள்ள அமைப்புகளும் உள்ளன. மென்போக்குள்ள அமைப்புகளும் உள்ளன. இது புலம்பெயர் தமிழர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் நிரந்தரப் பகை ஒன்று மூளுவதற்கான ஏதுநிலையை உருவாக்கியுள்ளது. எப்போதும் ஒரு நடவடிக்கையின் போது ஒரு இடைவெளி விடப்படுவதுண்டு. ஆனால், இங்கு அந்த வெளியை விட்டு வைக்க அரசாங்கம் விரும்பவில்லை.

கடும்போக்கு, மென்போக்கு என்று பாராமல் எல்லா புலம்பெயர் அமைப்புகளையுமே பயங்கரவாத அமைப்புகளாக பட்டியலிட்டுள்ளது. இதனால், இந்த அமைப்புகள் வேறு பெயர்களில் இலங்கை அரசுக்கு எதிரான பரப்புரைகளை இன்னும் தீவிரப்படுத்த முனையலாம்.

ஆனால், அரசாங்கம் எதிர்பார்ப்பது என்னவென்றால் தடைசெய்யப்பட்ட அமைப்புகள் தமிழர்களுக்காக எதைக் கூறினாலும், அதனை பயங்கரவாத அமைப்புகளின் கருத்தாக வெளிப்படுத்தி முடக்கி விடலாம் என்பதைத் தான்.

எவ்வாறாயினும், புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சு நடத்தாமல் ஒரு நிரந்தர அமைதியை உருவாக்க முடியாது என்ற கருத்து இலங்கை அரசாங்கத்துக்குள்ளே கூட இருக்கிறது.

இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று அண்மையில் புலம்பெயர் தமிழர்களுடன் சென்று பேச்சு நடத்தியிருந்தது.

அரசாங்கமும் கூட பின் கதவால் அவர்களுடன் தொடர்பைப் பேணவே முயன்றது.

ஆனால், ஜெனீவாவை நோக்கிய புலம்பெயர் தமிழர்களின் போராட்டத்தினால் இலங்கை அரசாங்கம் அங்கு எதிர்கொண்ட நெருக்கடிகள் இத்தகைய முடிவுக்கு இட்டுச் சென்றுள்ளன.

இந்தத் தடையின் மூலம் அரசாங்கம், உள்ளூரில் உள்ள தமிழர்களை தனித்து விடப்பட்ட நிலைக்கு கொண்டு வரலாம் என்றும் ஒரு தீர்வுக்கு இணங்க வைக்க முடியும் என்றும் நம்பலாம்.

ஆனால், புலம்பெயர் தமிழர்களுக்கும் இங்குள்ள தமிழர்களுக்கும் உள்ள தொடர்புகளை அரசாங்கத்தினால் முற்றாக அறுக்க முடியாது.

அவர்களின் குடும்ப உறவுகள் இங்கு தான் உள்ளனர். அவர்களின் சொத்துகள் இன்னமும் இங்கேயே உள்ளன.

இந்தத் தடையின் மூலம் இந்த உறவுகளை பணயம் வைத்து தமக்கு எதிரான வெளிநாட்டு அழுத்தங்களின் தீவிரத்தை குறைக்க முனைகிறது அரசாங்கம். ஆனால், இது எந்தளவுக்குப் பலனளிக்கும் என்று கூற முடியாது.

ஏனென்றால், அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு சர்வதேச நாடுகள் பலவற்றையும் நெருக்கடிக்குள் தள்ளும் முடிவாகும்.

இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ள ஐ.நா. தீர்மானத்தின் படி தடைசெய்யப்பட்ட அமைப்புகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எல்லா நாடுகளும் ஒத்துழைக்க வேண்டும்.

அவ்வாறாயின், இந்தப் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் செயற்படும் மேற்கு நாடுகளும் கூட இதற்கு ஒத்துழைக்க வேண்டியிருக்கும்.

ஆனால், இலங்கை அரசின் உள்நோக்கத்தைப் புரிந்துகொள்ளும் அந்த நாடுகள் அதற்கு ஒத்துழைக்குமா என்ற கேள்வி உள்ளது,

எவ்வாறாயினும், அரசாங்கத்தினது இந்தத் தடை உத்தரவு புலம்பெயர் தமிழர்களின் அரசியல் பலத்தை சிதைக்கும் ஒரு பெருந்திட்டம் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், அந்த முயற்சியில அரசாங்கம் எந்தளவுக்கு வெற்றி பெறும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்

# அதிஷ்டம் ஒரு தடவை தான் கிட்டும்

அனைத்துப் பொருட்களும் மிக மலிவாக கிடைப்பதனால் அப்பிரதேசத்தில் அந்த விற்பனை நிலையம் மிக பிரபல்யமடைய காரணமாக இருந்தது. அது இரண்டு பிரிவுகளாக, அதாவது ஒரு பிரிவு மளிகை சாமான்களையும் அடுத்த பிரிவு உணவு வகைகளையும் கொண்டு இயங்கிக் கொண்டிருந்தது.

மளிகை சாமான்கள் விற்பனைப் பிரிவு எவ்வித பிரச்சனைகளும் இன்றி இயங்கிக் கொண்டிருந்தாலும் உணவகப் பிரிவில் அடிக்கடி சிக்கல்கள் தோன்றிய வண்ணமே இருந்தன. கொத்துரொட்டி உள்ளிட்ட உணவு வகைகளை தொடர்ந்து தயாரிக்க கூடிய ஒருவர் அங்கு இல்லாததே அதற்கு காரணமாகும்.

அத்தொழிலுக்கு அங்கு வருபவர்கள் என்றும் நிலைத்து நிற்பதில்லை. லீவில் ஊருக்குச் சென்றால் இலகுவில் மீண்டும் உணவகத்திற்கு திரும்புவதில்லை. அதன் காரணமாக அடிக்கடி அத்தொழிலில் வெற்றிடங்கள் ஏற்பட்ட வண்ணமே இருந்தன.

அங்குள்ள ஏனைய வேலைகளை எவரும் பகிர்ந்து மேற்கொண்டாலும் ரொட்டி தயாரிப்பு என்பது ஒரு கஷ்டமான வேலையாக இருந்தது. அதற்கு திறமை, அனுபவம், கைப்பக்குவம், தேர்ச்சி என்பன மிகமிக அவசியமானதே. சுவையாகவும், சிறப்பாகவும், முறையாகவும் ரொட்டி தயாரிப்பை மேற்கொள்ளாவிட்டால் பணத்திற்கு பதிலாக வாடிக்கையாளர்களின் அதிருப்தியையே சம்பாதிக்க நேரிடும்.

எப்படியோ மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வந்த ஒருவருக்கு ரொட்டி தயாரிப்பதற்கான நியமனம் அங்கு வழங்கப்பட்டது. ரொட்டி வகைகள் பலதரப்பட்டவையாகும். அத்துடன் கொத்து ரொட்டியை விரும்பி உண்பவர்கள் அப்பிரதேசத்தில் அனேகம் பேர் இருந்தனர். அதனால் உணவகத்தின் உரிமையாளர்



அப்பிரிவில் தனது முழு கவனத்தையும் செலுத்தி வந்தார். அதுமாத்திரமல்ல கூடிய வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் பிரிவாக அந்த உணவகம் விளங்கியது. அதனால் ரொட்டி தயாரிப்பவருக்கு ஏனையோர்களை விட சம்பளமும், சலுகைகளும் மேலதிகமாக வழங்கப்பட்டன.

அந்த விற்பனை நிலையத்தில் வெளியார்களை விட உரிமையாளரது உறவினர்களே வேலையாட்களாக காணப்பட்டனர். தொழில் சட்டப்பிரச்சினை மாதாந்த சம்பளப் பிரச்சினை ஆகியவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே வெளியாரை வேலையில் அமர்த்திக் கொள்ள உரிமையாளர் முன்வருவதில்லை.

யானைப் பசிக்கு சோளம் பொறியை தூவுவது போல் மாதா மாதம் ஏதோ ஒரு தொகையை கொடுத்து உரிமையாளர் சமாளித்துவிடுவார். அங்கு வேலை செய்யும் உறவினர்கள் கூட எந்தக் கட்டத்திலும் அவருக்கு எதிராக போர்க் கொடியை ஏந்த மாட்டார்கள் என்ற திடமான நம்பிக்கை அவரிடம் இருந்துவந்தது. பொதுவாக அவர் நல்லதொரு மனிதர்.

மேலும் ரொட்டி தயாரிப்புக்கு தகுந்தவர்கள் அங்குள்ள உறவினர்கள் மத்தியில் இல்லாததால் வெளியிலிருந்து ஆட்களை கொண்டுவர வேண்டியிருந்தது. அங்கு வேலை செய்பவர்கள் சம்பள விடயத்தில் என்றுமே அவருடன் முரண்டு பிடிப்பதில்லை. கடலில் கப்பல் சென்றால் அதன் தடயமா தெரியப்போகிறது? அங்கு வேலை செய்பவர்கள் காற்றுள்ள போதே அவ்வப்போது தூற்றிக் கொள்ளத் தவறுவதில்லை.

'அள்ளுவாரோடு வாழ்ந்தாலும் சிறுக சிறுக கிள்ளுவாரோடு வாழக்கூடாது' என்று பெரியோர்கள் கூறி வைத்தாலும் சில விடயங்களை கண்டும் காணாதமாதிரி நடந்து கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் உரிமையாளருக்கு இருந்து வந்தது. நீண்ட காலம் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதால் அவரிடம் சிறந்த வியாபார தொழில்நுட்பத்தினை காணக்கூடியதாக இருந்தது. அத்துடன் அவர் ஒரு பொறுமைசாலியும் கூட. விற்பனை நிலையத்தின் வளர்ச்சியில் உரிமையாளரை விட கடும் கரிசனை கொண்டவராக அங்கு ரொட்டி தயாரிப்பவர் திகழ்ந்தார். 'சோலியன் குடும்பி சும்மா ஆடாது' என்பதை அந்த உரிமையாளர் விளங்கிக் கொள்ளாவிட்டாலும் அங்குள்ளவர்களும் அயலிலுள்ள கடைக்காரர்களும் மிக தெளிவாக விளங்கிக் கொண்டு இருந்தனர். அந்த விற்பனை நிலையத்தின் இரு பிரதான பிரிவுகளையும் உட்புறமாக பிரிக்கும் இடத்தில் பொதுவான ஒரு வாசல் இருந்தாலும் அது என்றுமே இரவு வேளையில் பூட்டுப் போட்டு மூடுவதில்லை. அதன் அருகிலே உரிமையாளரின் ஆசனம் அமைந்திருந்தது. அங்கு இருந்து கொண்டே இரண்டு பிரிவுகளின் வியாபார நடவடிக்கைகளை கவனித்து வருவார் அந்த உரிமையாளர்.

விற்பனையின் போது இடம் பெறும் கொடுக்கல் வாங்கல் அனைத்தையும் உரிமையாளர் மேற்கொண்டாலும் அவர் அங்கு இல்லாத சமயம் அவரது மனைவி அல்லது அவரது இளைய சகோதரன் மட்டுமே பணப்புழக்கத்தில் ஈடுபடுவார்கள். எந்த விடயத்திலும் மிக கரிசனையோடு செயல்படும் ரொட்டித் தயாரிப்பாளர் அந்த குறுக்கு கதவுக்கு பூட்டொன்றை வேண்டி, இரவு வேளையில் அதைப் பூட்டி விட்டு செல்லுமாறு உரிமையாளரிடம் கூறி அந்தப்பூட்டையும் இரு திறப்புக்களையும் அவரிடம் கொடுத்திருந்தார். அதற்கான பணத்தை உரிமையாளர் அவருக்கு கொடுக்க மறக்கவில்லை.

வழமையாக விற்பனை நிலையத்தை முற்றாக இரவு வேளையில் மூடும் பொழுது குறித்த கதவு பூட்டின்றியே மூடப்படும். காரணம் விற்பனை நிலையத்தை சுற்றி நல்ல பாதுகாப்புண்டு. ரொட்டித் தயாரிப்பாளரின் கரிசனையை உதாசீனப்படுத்த விரும்பாத உரிமையாளர் அன்றிலிருந்து அக்கதவுக்கு பூட்டுப் போட்டு மூடிவிட்டே வீடு செல்வார்.

அவர் வீடு செல்லும் பொழுது அன்றைய முழு விற்பனைப் பணத்தையும் தன்னுடன் எடுத்துச் செல்வதே வழமை. ஆனால் அன்று வேறு யோசனை காரணமாக அதை அடியோடு மறந்து வீடு சென்றுவிட்டார். அடுத்த நாள் அதிகாலையுடன் எழுந்து விற்பனை நிலையத்திற்கு சென்றிருந்த பொழுது அவர் அங்கு கண்ட காட்சி அவரை ஒரு கணம் தடுமாறச்செய்தாலும், தன்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டு 'யாரது? இங்க என்ன செய்றீங்க? என்று கேட்டபொழுது இருட்டில் அங்கு நின்ற உருவம் 'எனக்கு கொஞ்சம் நெஞ்சு எரிச்சல், அதுதான் சோடா குடிக்கலாமென்று ...' அவ்விதம் அந்த உருவம் கூறிய பதிலை காதில் வேண்டாத உரிமையாளர் மேசை இலாச்சியை திறந்து நேற்று விட்டுப் போன விற்பனை பணம் இருக்கிறதா என்று பார்த்தார். ஆனால் அது அங்கு இல்லை.

அதற்கிடையில் அங்கு இருட்டில் நின்ற அந்த உருவம் அவருக்குத் தெரியாமல் மெதுவாக மறைந்து சென்றது. அவர் உடனே தனது இளைய சகோதரனுக்கு தொலைபேசி மூலம் விசயத்தை விளக்கி கூற அவர் ஒரு சில மணி நேரத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருடன் அங்கு வந்து சேர்ந்தார்.

**...நாட்டு நடப்பு...**

அங்கு புலனாய்வு ஆரம்பிக்கப் பட்டதையடுத்து பல விடயங்கள் அம்பலமாயின. அறையொன்றில் தொங்கவிடப்பட்டிருந்த பிரயாணப் பைக்குள் பணமாக ரூபா எண்பதாயிரம், முழுநீள சிகரெட் பண்டல் ஒன்று கட்டுக்கட்டாக கையடக்க தொலைபேசி அட்டைகள், வங்கிக் கணக்கு புத்தகம் ஆகியன கண்டெடுக்கப்பட்டன.

உரிய வங்கிக்குச் சென்று கணக்கு



புத்தகத்தின் உரிமையாளரைக் கொண்டே அதில் வைப்பிலிடப்பட்ட ரூபா முப்பதினாயிரமும் மீளெடுக்கப்பட்டது. திருட்டில் சம்பந்தப்பட்டவர் ஒப்புக்கொண்டதையடுத்து எந்தவித சட்ட நடவடிக்கையும் இன்றி அவர் விடுவிக்கப்பட்டார். ஆனால் பொலிஸ் உத்தியோகத்தர் இடம்பெற்ற சம்பவத்தை பதிவு செய்ய தவறவில்லை.

சம்பந்தப்பட்டவரை வெறுங்கையுடன் அனுப்ப விருப்பமில்லாத உரிமையாளர் ரூபா ஐயாயிரத்தை போக்குவரத்துச் செலவுக்காக கொடுத்தனுப்பினார். 'மன்னித்தேன் பிழைத்துப் போ' என்று உரிமையாளரின் உதடு சத்தமில்லாது துடித்த அதே வேளையில் 'தப்பினேன் பிழைத்தேன்' என அங்கே இன்னும் ஓர் உதடும் சத்தமில்லாது துடிக்கத் தவறவில்லை.

அடுத்த நாள் உரிமையாளருக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்தது. 'பொஸ் சுகமாக இருக்கிறீங்களா? என்று நலம் விசாரித்துவிட்டு, விற்பனை நிலையத்திற்குரிய சில பொருட்கள் இருக்கும் இடத்தை கூறி அவற்றை எடுத்துக்கொள்ளும்படி தயவாக அந்த குரல் கேட்டுக்கொண்டது.

அன்று இருட்டில் நின்று கொண்டிருந்த அந்த மர்ம உருவமும், முழத திருட்டுக் குரியவரும், தொலைபேசிக் குரலும், வேறு யாருமல்ல அந்த விற்பனை நிலையத்தின் குறுக்கு கதவுக்கு கரிசனையுடன் பூட்டும் திறப்பும் வேண்டிக்கொடுத்த ரொட்டித் தயாரிப்பாளரே!! பூட்டை வேண்டிக் கொடுக்கும் போதே புத்திசாலித்தனமாக திருட்டுத் திறப்பையும் தயாரித்துக் கொள்ள அவர் மறந்துவிடவில்லை. எப்படியோ வாயில் நான்கு பற்கள் இல்லாமல் அங்கு வந்திருந்தவர் தற்பொழுது தலா ஏழாயிரம் ரூபா படி நான்கு பற்களையும் கட்டிக் கொண்டுள்ளார்.

ஒரு தடவை ஊருக்குப் போக அவரின் கையில் பணமில்லாத போது உரிமையாளர் தனது மோதிரத்தை கழற்றிக் கொடுத்து, அடகு வைத்து பணத்தை எடுக்கும்படி கூறியிருந்தார். அதிர்ஷ்டம் ஒரு தடவை தான் வரும்.

– பாலையூற்றான் –

## 45 வருடங்கள் தாமதமாக கிடைத்தன

நியூயார்க நகரத்தில் Susan Heifetz என்ற பெண்ணுக்கு கடந்த புதன்கிழமை மூன்று கடிதங்கள் வந்தன. அந்த கடிதங்கள் அனுப்பப்பட்ட தேதியை பார்த்து அவர் அதிர்ச்சி அடைந்தார். காரணம் அவற்றில் ஒரு கடிதம் ஜூன் 26, 1969ஆம் ஆண்டு அனுப்பப்பட்டது. அவருடைய தாயார் அவருக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறி அனுப்பிய கடிதம் அது.

அடுத்த கடிதம் அவருடைய முன்னாள் ஆண் நண்பர் ஒருவர் வியட்நாமில் இருந்து அனுப்பிய கடிதம். இந்த கடிதமும் 1969ஆம் ஆண்டு அனுப்பப்பட்டது. மூன்றாவது கடிதம் அவருடைய சகோதரர் Barry என்பவர் அனுப்பிய பிறந்தநாள் கடிதம்.

கடிதங்கள் தாமதமாக டெலிவரி செய்யப்பட்டது குறித்து நியூயார்க் தபால்நிலையம் இதுவரை தனக்கு எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை என்று நியூயார்க் டைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

## குரூப் போட்டோ எடுத்த விபரீதம்

அமெரிக்காவில் உள்ள பள்ளி மாணவிகள் 22 பேர் சுற்றுலா சென்ற இடத்தில் ஒரு மரப் பாலத்தில் நின்று குரூப் போட்டோ எடுத்துக் கொண்டிருந்த போது திடீரென அந்த மரப் பாலம் இடிந்து விழுந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அமெரிக்காவில் உள்ள Nebraska high school என்ற பள்ளியை சேர்ந்த 22 மாணவிகள் வார விடுமுறையில் சுற்றுலா சென்றனர். சுற்றுலா சென்ற இடத்தில் மாணவிகளில் ஒருவருக்கு சொந்தமான ஒரு அழகிய பங்களாவில் அனைவரும் தங்கினர்.

அந்த வீட்டின் அருகில் ஒரு ஓடையை கடப்பதற்காக மரத்தில் ஆன பாலம் ஒன்றை கட்டியிருந்தனர். அந்த பாலத்தில் நின்று புகைப்படம் எடுக்க மாணவிகள் விரும்பினர். 22 மாணவிகளும் வரிசையாக நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டு இருந்தபோது திடீரென அந்த மரப்பாலம் இடிந்து விழுந்தது. மாணவிகள் அனைவரும் தடுமாறி கீழே விழுந்தனர். அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மனம்

நன்றி : மகுடம்

அந்த வீதி நீளமாக இருந்தது. அது மாசி மாத ஆரம்பம் என்பதால் பனி நன்கு கொட்டியிருந்தது. குதிரையின் காலடித்தடங்களும், அவை இழுத்துவந்திருந்த கூட்சு



வண்டிகளின் சக்கர தடங்களும் வெள்ளைத்தாளில் வரையப்பட்டிருந்த புரியாத ஓவியங்களைப் போல் குறுக்கும் நெடுக்குமாக நீண்டு இருந்தன.

அந்த வீதியால் தான் ஒரு கூட்சு வண்டி அவசரமில்லாது வந்துகொண்டிருந்தது. தனக்கும் வலிக்காமல், நிலத்திற்கும் வலிக்காமல் வெகு நிதானமாக நடந்துவந்து கொண்டிருந்தது ஒரு கிழட்டுக் குதிரை. அக்கூட்சு வண்டியினை ஓட்டி வந்தவருக்கும் வயது அதிகம் இருக்கும். கிட்டே போய் முகர்ந்து பார்த்தால் அவரிடமிருந்து 'மலையாடு' வாசனை வரும் போல் தோன்றியது. அந்த வண்டிக்குள் தான் போர்வை ஒன்றினால் தன்னுடைய உடம்பினை முழுக்க போர்த்திக் கொண்டு விளாமிடிர் யோகொவிச் உட்கார்ந்திருந்தான்.

அது ஒரு மழைக்காலம். காலையில் இருந்து கொட்டிக் கொண்டே இருக்கிறது. இன்னும் தீரவில்லை. சின்ன வயதில் மழை வந்தால் நானும் தங்கை அன்னாவும் மழையில் நனைந்து கொண்டே பாட்டுப் பாடுவோம். தெருவில் நாங்கள் மட்டுமே இருப்போம். வேறு ஒருவரும் இருக்கமாட்டார்கள். ஒரு விதத்தில் அது எங்களிற்கு சுதந்திரமாகவும் கூடுதல் உற்சாகமாகவும் இருக்கும். என் தங்கைக்கு மழை என்றால் அலாதி பிரியம். மழை எங்கே இருந்து அண்ணா வருகின்றது?.. வானத்தில் கடல் இருக்கா அண்ணா? அப்பொழுது எனக்கும் சிறிய வயது என்பதால் வானத்தில் கடல் இருக்கலாம் என்று பதிலுரைத்துவிட்டு அடுத்த கேள்வியினைக் கேட்க முன் சிட்டாக பறந்துவிடுவேன்.

அது ஒரு காலம். இப்பொழுது நான் வளர்ந்து பெரியவன் ஆகிவிட்டேன். என்னுடைய நிலை தெரியாமல் கன்னாபின்னா என்று கொட்டிக்கொண்டிருக்கும் பொழுது முட்டாள் மழை... நேரம் காலம் தெரியாமல் கொட்டித் தொலைக்கின்றதே என்று கடிந்து கொள்வேன். அப்படிப்பட்ட ஒரு சலிப்பு மழை தினத்தில் தான் என் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் சண்டை வந்தது.

என்னுடைய அப்பாவினை எனக்கு மிகவும் பிடிக்கும் என்று சொல்லமுடியாது. இருந்தாலும் பிடிக்கும். அப்பா ஒரு விவசாயி. சொந்தமாக ஒரு வயல் நிலம் வைத்திருக்கின்றார். அதில் கிழங்கு பயிரிடுவார். பெரும்பாலும் அவருடைய கிழங்கு உள்ளூர் சந்தையில் தான் எடுபடும். அதிசயமாக எப்போதாவது அசலூர் விவசாயிகள் வந்து வாங்கிச் செல்வார்கள். அவ்வாறான நாட்களில் எனக்கு உடுப்பு எடுத்துத் தருவார். நான்கு அல்லது ஐந்து மாதங்களில் கிழிந்துவிடும் அல்லது கிழித்து விடுவேன். ஆனால் என் அப்பா அடிக்க மாட்டார். இது கிழிந்தால் என்ன இன்னொன்று வாங்கினால் போச்சு என்று கூறி நெற்றியில் முத்தமிடுவார். இப்படியான சிறு சிறு விடயங்கள் தான் அம்மாவைவிட அப்பாவின் மீது அதிக பிரியம் வர காரணமாக இருந்திருக்கலாம்.

சொந்தமாக மலையாடு வைத்திருப்பவர்கள் தங்கள் மலையாடுகளை என் அம்மாவிடம் கொடுப்பார்கள். அவள் அவற்றை காலையிலிருந்து மாலை வரை மேய்த்து விட்டு வருவாள். ஐந்நூறு அல்லது அறுநூறு ரூபிள் தேறும். அதை யாருக்கும் கொடுக்கமாட்டாள். எங்கள் வீட்டு நிலவறையின் கீழே பழைய பொருட்களை வைப்பதற்கான ஒரு அறை இருக்கின்றது. நிறைய பிரம்பு கூடைகள் இருக்கும். ஒவ்வொரு பிரம்புக் கூடைகளினையும் எடுத்து கீழே வைத்துவிட்டு கடைசியாக இருக்கும் பிரம்புக் கூடையுள் அதனை ஒளித்து வைப்பாள். நிலவறையின் சாவி அம்மாவிடம் தான் எப்பொழுதும் இருக்கும். இதுவரை எனக்கென்று எதுவும் அவள் செய்ததில்லை. ஏதாவது கேட்டால், எதற்கு என்னிடம் கேட்கின்றாய்? உன் அப்பாவிடம் போய் கேட்க வேண்டியது தானே என்பாள். இவைகளால் தான் அம்மா மீது எனக்கு வெறுப்பு உண்டாகியிருக்கலாம்.

சண்டை இன்னும் ஓய்ந்த பாடில்லை. நேரம் போகப் போக சண்டையின் உக்கிரம் கூடிக்கொண்டே போனது. எதற்கு சண்டை என்றே புரியவில்லை. என்ன செய்வதென்று புரியாமல் ஒரு ஓரமாய் போய் நின்று கொண்டிருந்த பொழுது தான், அப்பா கோபத்தில் எறிந்த பொருளொன்று அம்மாவின் தலை ஓட்டினை பதம் பார்த்தது. அடி விழுந்த கொஞ்ச நேரத்திலேயே மண்டை ஓட்டிலிருந்து இரத்தம் வழியத்தொடங்கியது. அப்பாவிற்கு இது தெரியுமோ தெரியாது. ஆத்திரத்தில் வீசிய உடனேயே விருட்டென்று வெளியே கிளம்பி விட்டார்.

அன்று போன அப்பா தான். அதன் பிறகு வீடு திரும்பவே இல்லை. ஆரம்பத்தில் அம்மா எங்கள் கிராமம் முழுவதும் சுற்றித் திரிந்தாள். அப்பா பற்றிய எந்தத் தகவலும் தெரியவில்லை. ஒவ்வொரு தடவை படலை திறபடும் சத்தம் கேட்கும் பொழுதும் அம்மா, அப்பா தானா என்பது போல எட்டிப் பார்ப்பாள். இல்லை என்று தெரிந்ததும் அவளின் முகத்தில் ஏமாற்றமும் சோகமும் கலந்திருக்கும். அப்படியான வேளைகளில் வீட்டை விட்டு விரட்டி விட்டு இப்பொழுது தேடுகின்றாயா? உன்னால் தானே அவர் வீட்டை விட்டு போனார் என்று உள்ளுக்குள் நினைத்துக் கொள்வேன். எனக்கும் அப்பா இல்லாதது பெரிய கவலை தான்.

நாளாக நாளாக அப்பாவின் நினைவு வருவது கொஞ்சம் குறைந்தது. படலை திறக்கும் சத்தம் கேட்கும் போது ஓடிவருவதை அம்மா நிறுத்தி இருந்தார். வழமைபோல் மலையாடுகளை மேய்க்கப் போயிருந்தாள். அப்பா விவகாரம் தெரிந்தால் அம்மாவின் வருமானம் கொஞ்சம் அதிகமானது. அதில் பன்றிக் கால் சூப்பும், வான்கோழி கறியும், ரொட்டிகளும் செய்து தந்தாள். என்றாலும் அன்றைய பன்றிக் கால் சூப் கொஞ்சம் அதிகப்படியான சுவையுடன் இருந்தது. பன்றிக்கால் சூப்பினை மட்டும் வைத்துச் சொல்லவில்லை. அன்று என்னை நகரத்து சந்தைக்கு அழைத்துச் சென்று மூவாயிரம் ரூபிளில் ஒரு புதிய ஆடை வாங்கித் தந்தாள். வீடு திரும்பியதும் அவளை கட்டிப்பிடித்து நெற்றியில் முத்தம் கொடுக்கவேண்டும் போல் தோன்றியது.

வருடங்கள் ஓடி விட்டன. என் அம்மாவின் முகத்தில் இப்போது நிறையவே சுருக்கங்கள். முன்பு போல தனியாக நடக்கக் கூட முடியவில்லை. நிமிடத்திற்கு ஒரு தடவை இருமிக் கொண்டே இருந்தாள். அப்படியிருந்தும் மலையாடு மேய்க்கப் போவாள். இன்று நீங்கள் போக வேண்டாம், நான் போகின்றேன் என்று கூறினாலும் கேட்க மாட்டாள். சில நேரங்களில் ஒளிந்திருந்து அவளை கண்காணிப்பேன். ஒரு இடத்தில் மலையாடுகளை மேய விட்டுவிட்டு ஒரு மரத்தின் கீழே உட்கார்ந்திருந்து, ஒரு பட்டையை எச்சிலினால் ஈரமாக்கி அது உலர்ந்ததும் அதை உருட்டி உருண்டையாக்கி இருமலை சற்று நேரம் தள்ளிப் போடுவதற்காக போடுவாள்.

பெரும்பாலும் தனியாக கதைப்பாள். என்ன கதைக்கின்றாள் என கிட்டே போய் காதைக் கொடுத்து கேட்டால் ஒன்றுமே விளங்காது. சில நேரங்களில் ஏன் அன்று அப்பாவுடன் சண்டை போட்டேன் என்று எண்ணுகின்றாளோ என்னமோ? நான் கூட தனியே இருக்கும் போது கேட்க வேண்டும் என்று தான் நினைக்கின்றேன். ஆனால் என்னமோ அவளின் முகத்தைப் பார்த்ததுமே கேட்க எண்ணியிருந்த எதுவும் கேட்கத் தோணுவதில்லை.

அன்றொரு நாள் வெளியே மழை இன்னும் கொட்டத் தொடங்கவில்லை. அம்மா அப்பொழுது தான் மலையாடுகளை மேய்த்துவிட்டு வந்திருந்தாள். வந்தவள் என்னை அவசர அவசரமாய் தேடினாள். என்னைக் கண்டதும் அவள் முகத்தில் சிறிய பிரகாசம் தெரிந்தது. நிலவறைக்குச் சென்றாள். பழைய பிரம்புக் கூடைகள் இறக்கப்படும் ஓசைகள் மெதுவாக கேட்டன. பின் கொஞ்ச நேரத்தில் மறுபடியும் அவை இருந்த மாதிரியே வைக்கப்படும் ஓசை கேட்டது. அவள் கையில் பழந்துணி இருந்தது. நேராக என்னிடம் வந்தாள். வந்து எனக்கு அருகில் அமர்ந்து கொண்டாள். தன் கையில் இருந்த பழம் துணியினை என்னிடம் கொடுத்து பிரித்துப் பார்க்கச் சொன்னாள். பிரித்துப் பார்த்தேன். உள்ளே ஐம்பது, இருபது, பத்து, நூறு என்கின்ற கணக்கில் சில கசங்கிய ரூபிள் தாள்கள் இருந்தன. எடுத்துக்கொள் இவற்றையெல்லாம் நான் உனக்காகவே சேர்த்து வைத்திருந்தேன். எப்பொழுது இவை உனக்கு தேவைப்படுகின்றதோ அப்பொழுது உன்னிடம் தரலாம் என்று வைத்திருந்தேன். இதை நீ எப்படியென்றாலும் செலவழித்துக் கொள்ளலாம் என்றாள். அவளிடம் சொல்வதற்கு எவ்வளவோ வார்த்தைகள் இருந்தாலும், ஒன்றுமே சொல்லாமல் எழும்பி போகும் அவளையே மௌனமாக பார்த்துக் கொண்டிருந்தேன்.

தற்போதெல்லாம் அம்மாவின் மீது எனக்கு அதிகப்படியான பாசம் வந்திருந்தது.

அம்மா களைப்பில் அசந்து தூங்கிக்கொண்டிருந்தாள். போடுவதற்கு அவளிடம் அந்த ஒரு ஆடை மாத்திரமே இருந்தது. மலையாடுகளுடன் பழகிப் பழகி அவளிடமும் மலையாட்டின் வாசனை இருக்கும். எப்போ கடைசியாக குளித்தாள் என்று தெரியவில்லை. எனக்காகத் தான் இவ்வளவு காலமும் பணத்தை சேர்த்து வைத்திருக்கின்றாள் என எண்ணும் போது தொண்டைக் குழியில் ஏதோ இறங்குவதைப் போல் உணர்ந்தேன். அப்பா போன பிறகு எனக்காக வாழ்ந்தவள் இவள் மட்டும் தான். மகனாக இவளுக்கு எதுவுமே நான் செய்ததில்லை என்று எண்ணியவன் மறு நாள் நகரத்து சந்தைக்குச் சென்று மூவகை நிறங்களில் கட்டம் போட்ட கையுறைகள் வாங்கி வந்தான். அம்மா இன்னும் வரவில்லை. வந்ததும் கொடுக்கவேண்டும்.

கதவினைத் திறந்த போது கீழே ஒரு கடிதம் கிடந்தது.

அன்புள்ள மகனுக்கு என்னை மன்னித்துவிடு. நான் செய்தது துரோகம் என்று எனக்குத் தெரியும். அதிலும் முக்கியமாக உனக்கு. ஒருவரை ஒருவர் பிரிவது என்பது நிதர்சனம் என்றாலும் எங்கள் வாழ்க்கையில் அது சீக்கிரமே நடந்துவிட்டது. நான் தற்போது பிட்டர் ஸ்பெர்க் இல் இருக்கின்றேன். ஒரு கணவனை இழந்த பணக்கார சீமாட்டியுடன் வாழ்கின்றேன். அவளிடம் உன்னைப்பற்றி நிறையவே சொல்லியிருக்கின்றேன். உன்னையும் இங்கேயே அழைத்துவரும்படி அடிக்கடி கேட்பாள். இங்கே வந்தால் உனக்கும் சொர்க்கம் காத்திருக்கிறது. உன் தாய் வேண்டாம் அவள் ஒரு மிருகம். அவளுக்கு மலையாடுகளும், ரூபிள்களும் தான் முக்கியம். உன் தங்கை அன்னாவும் இங்கே தான் இருக்கின்றாள். இப்படிக்கு அப்பா.

கடிதத்தினை பார்க்க பார்க்க எனக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. குறள் வலையினை நசித்தே அவரை கொல்ல வேண்டும் போல் தோன்றியது. என் அம்மாவைப் பற்றி உனக்கென்ன தெரியும்! என்று கோபப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் அம்மா வந்தாள். இனியும் இவளைத் தவிக்க வைக்கமுடியாது. தனிமை அவளை மிகவும் பாதித்துவிட்டது.



முடிவெடுத்துவிட்டேன். அம்மாவுக்கு நான் செய்யக்கூடிய ஒரேயொரு நல்ல காரியம் இதுதான். இனியும் இவளைத் தவிக்கவைக்க முடியாது. இப்பொழுதே இவளை அப்பா இருக்கும் இடத்திற்கு அழைத்துப் போய் அம்மா என்கின்ற வார்த்தைக்கு இருக்கும் புனிதத்தை பற்றி விளக்குகின்றேன். பணத்திற்காக கட்டியவளையும் பெற்றவனையும் விட்டு விட்டுப் போன நீ மனிதனா அல்லது எனக்காகவே கஷ்டப்படும் என் அம்மா மனிதனா என்று கேட்கின்றேன்.

திடீரென்று வண்டி சற்று குலுங்கியது. விளாமிடிர் யோகொவிச் முழித்துக் கொண்டான். அவனின் பக்கத்தில் அம்மா ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். வாய் பிளந்திருந்தது. மூச்சு விடுவது பெரும் சத்தமாய் கேட்டது. சில நிமிடத்திற்குப் பின் வண்டியினை நிற்கச் சொல்லி வண்டிக்காரருக்குக் கட்டளையிட்டான். வண்டி நின்றது. முதலில் தான் கீழே இறங்கினான். பின் தூங்கிக் கொண்டிருந்த தன்னுடைய தாயினை அள்ளி எடுத்தான். தான் தூக்கப்படுவதை உணர்ந்து தாயும் முழித்துக் கொண்டாள். எதற்காக என்னை கீழே இறக்குகின்றாய் யோகோ? கொஞ்சம் இருங்கள் தாயே. சிறு மௌனத்தின் பின்னர், தாயே சிறிது நேரம் இங்கேயே இருங்கள். நான் கொஞ்ச நேரத்தில் மறுபடியும் வந்து உங்களை அழைத்துப் போகின்றேன். 'சரி போ' என்றாள் தாயும். தாய் இவனைப் பார்த்து சிநேகமாய் கையசைத்தாள் வண்டி மறையும் வரை.

சிறிது நேரத்தில் தான் உறங்குவதற்கு ஏற்ற இடத்தினை தெரிவு செய்து தனது அழுக்குப் பையினை முட்டுக்கொடுத்து உறங்கிப் போவாள். குதிரை வண்டி சத்தம் கேட்கும் ஒவ்வொரு தடவையும் தன் மகனா என எழும்பிப் பார்ப்பாள். இன்னும் இரண்டு நாட்களில் மகன் இனி வரவே மாட்டான் என்கின்ற உண்மை அவளுக்குத் தெரியவரும்.

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலையெங்கள் சிறப்பிடம்

திருக்கோணமலை எங்கள்
சிறப்பிடம்
அருட் திருக் கோணேசர்
அமர்ந்த இடம்!

இயல் இசை நாடகங்கள்
வளர்க்குமிடம்
இயற்கை எழில் சூழ்ந்திருக்கும்
நிறை குடம்!

தேவாரப் பாடல் பெற்ற
திருத்தலம் சிவன்
தேவி மாதுமையோடு
வாழுமிடம்!

தெட்சிண கைலாயம் என
பெயர் பெற்ற இடம்
தேமதுரத் தமிழோசை
ஒலிக்குமிடம்!

வரலாற்று தொன்மைகளை
வடிவமைத்த இடம்
திருக்கோணமலை எங்கள்
சிறப்பிடம்!

கவித்துயிலன்
சேனையூர் மூதூர் - கிழக்கு

## மீண்டுமொரு ....

நாய்க்குட்டியொன்று
உயிருக்காய் கெஞ்சுகின்றது.

அந்திம காலத்தில்
புறப்பட்ட காலன்
நிமிட நேரத்திற்காக
காத்திருந்து ... காத்திருந்து ...

சூரியன் நெருப்பூட்டி
சோறாக்க தொடங்குகின்றான்

வானத்து குளமொன்றில்
பூத்த தாமரைகள்
கெஞ்சல் குரலுக்கு
குடை பிடிக்கத் தொடங்கின

காத்திருந்து . . அவதிப்பட்டு
களைத்துப் போனவன்
வியர்வை நெற்றியை
விரைவாகத் தடவி. . . .

மீண்டுமொரு மார்க்கண்டேய
புராணம் படித்திட
நாய்க் குட்டிக்கு நல்ல
பெயறொன்று தேடி

- திருமலை சுந்தா -

## ஈரம் ஆறாத நினைவு

அலைகளும் உதிர்ந்துபோன கடலில்
கால்கள் புதைத்தபோது
தெருவில் இறைந்துகிடந்த
துண்டுப் பிரசுரங்களில் அச்சிடப்பட்டிருந்த
உன்முகம் நினைவிலெழுந்தது

புன்னகையின் உதடுகள் தீண்டா
பொழுதொன்றில்
இசை தீர்ந்த வீணையாய் கிடந்த
காற்றும் வருடாத அந்தப் பிரசுரத்தை
வெய்யில் உலர்த்தியபடியிருந்தது

கடலில் அலைகளில்லை
நெஞ்சின் ஓரங்களில் இரைந்தது பிரளயம்

யார் இசைப்பார் தோழனே
உன் பெயரினாலொரு கீதத்தை.

சித்தாந்தன்
நன்றி – மறுகா



## எனது இரவும் உனது நினைவும்

- மாயன் -

நித்திரையின்றிய இரவுகளில்
நித்தமும் உந்தன் கனவுகள்

நினைவுகள் முழுமையும் விட்டுவிட்டு
நித்திரை வாங்கிச் சென்றாய் நீ

மின் விளக்கை அணைத்த பின்
இருள் தழுவிய அறையினுள்ளே
உற்றுப் பார்க்கும் என் விழிகள்

உயிர்ப்புடன் அருகில் நீ. . .

மோகம் மூச்செறியும்
முயங்கும் முனைப்புடன்
தடவும் என் கைகளில்
தட்டுப்படாதிருப்பினும்

உயிர்ப்புடன் அருகில் நீ. .

இரவு முழுவதும்
உறங்காதிருக்கிறோம்
நாம். .

மெல்லிய சூரியச் சிதறலின்
முனை பட்டுக் கிழியும்
இருள்.

என் கனவும் கூட . . . .

நீ போய் விட்டாய்
நான் காத்திருக்கிறேன்

உனக்காகவா ? அல்லது இரவுக்காகவா?

# கோணேசர் கல்வெட்டு

**பாகம் : 02**

மனுநீதி கண்ட சோழன் மரபில் வந்த வரராம தேவனுடைய மகன் குளக்கோட்ட மன்னன் திருகோணமலையிலுள்ள கோணேஸ்வரத்தில் திருப்பணிகள் செய்ததாக 'திருமருவு மனு நீதி கண்ட சோழன்' என்று தொடங்கும் கோணேசர்



கல்வெட்டின் முதலாவது பாடல் மூலம் அறியக்கிடக்கின்றது.

கடந்த வாரத் தொடர்ச்சி ....

திருக்கோணேஸ்வரத்தில் திருப்பணிகள் செய்த குளக்கோட்ட மன்னன் அவ்வாலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகளும், ஆலய நிர்வாகமும் ஒழுங்குமுறை தவறாது நடைபெறுவதற்காக சட்ட திட்டங்களை உண்டாக்கினான். அழகு வாய்ந்த கோபுரங்களும் அழகிய மதில்கள் சூழ்ந்த மண்டபங்களும், நீர் நிறைந்த சுனையும் (பாவநாசச் சுனை), குளங்களும் (அல்லைக்குளம், வெண்டரசன் குளம், கந்தளாய்க் குளம்) அமைத்தான்.

குளக்கோட்ட மன்னன் கட்டுக்குளப் பற்றில் கனகசுந்தரப் பெருமாளை நிர்வாகப் பொறுப்பதிகாரியாக நியமித்து அவர் கோணேசர் கோவிலில் செய்யவேண்டிய திருத்தொழும்புகள் எவையெவையென்று நியமம் செய்து செப்பேட்டுப் பெருவளமைப் பத்ததியும் கொடுத்தான். இவர் பெரிய கணக்கு, வளமைப்பத்ததி, கல்வெட்டுப் பத்ததி ஆகிய ஆவணங்களுக்கு பொறுப்பாக இருந்தார்

. ஒரு சமயத்திலே கோயிலின் பரிபாலனத்துக்கு பொறுப்பாகவிருந்த தலைமைக் குருக்களும், குளக்கோட்ட மன்னன் சார்பாக திருகோணமலையை அரசாட்சி செய்த பூபாலனும் கோயில் இருப்பாகவுள்ள பொற்காசு, பொன்னகை ஆகிய பற்றி அறிந்து கொள்ள அதற்கு பொறுப்பாகவிருந்த கனகசுந்தரப் பெருமாளை அழைத்து வருவதற்காகச் செண்பகராயர், பெரிய பிள்ளைப் பண்டாரம் ஆகிய இருவரையும் ஐந்து குடிமைகளோடு நிலாவெளிக்கு அனுப்பியிருந்தார்கள். அவர் முற்காலத்து மன்னர்கள் கோயிலுக்கு கொடுத்த பொற்காசு, பொன்னகை பற்றிய விபரங்களை பத்ததியை பார்த்து சொன்னார்.

நிலாவெளியிலிருந்த கனகசுந்தரப் பெருமாள் என்னும் பட்டத்துக்குரிய குலத்தவர் கோயிற் கணக்குகள் பற்றிய ஆவணங்களுக்கு பொறுப்பாக இருந்தனர் என்பதும், அவர்கள் வன்னிமைகள் என்ற பட்டத்துக்குரியவர்கள் என்பதையும் அறியக்கூடியதாகவுள்ளது. கருகுலக்கணக்கு என்னும் தலைப்பின் கீழுள்ள பகுதியில் ஐம்பதுக்கு மேற்பட்ட கணக்கரின் பெயர்கள் காணப்படுகின்றன. கோணேஸ்வரத்தின் பராமரிப்புக்காக உண்டாக்கப்பட்ட நிலபுலங்கள், கிராமங்கள் அங்கங்கே குடியமர்த்தப்பட்ட மக்களின் கடமைகள், கோவிற் தொழும்புகளுக்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள் கோவிலுக்குரிய திரவியங்கள், தானியங்கள், எண்ணெய் வகைகள், களஞ்சியப் பொருட்கள் முதலிய சேமிப்புக்கள் என்பவற்றைச் செப்பேட்டுப் பெரியவளமைப் பத்ததியிற் குளக்கோட்ட மன்னனால் திட்டம் பண்ணியுள்ளபடி செயற்படுத்தும் பணிகளை கனகசுந்தரப் பெருமாள் செய்து வந்துள்ளார்.

### தொழும்பு

குளக்கோட்டன் ஆலய பணிகளை (தொழும்புகள்) நியமமாக



செய்வதற்காக மருங்கூர், காஞ்சிபுரம், திருநெல்வேலி, காரைக்கால் முதலிய ஊர்களிலிருந்து பல குடிகளை வரவழைத்து நிலபுலம் முதலானவற்றைக் கொடுத்து அவர்கள் தலைமுறை தலைமுறையாகச் செய்ய வேண்டிய கடமைகளை வரையறை செய்தான்.

சான்றாக காரைக்காலில் இருந்து அழைத்து வரப்பட்ட வரிப்பத்தார் எனப்படும் குடிமக்கள் செய்ய வேண்டிய தொழும்புகளாக கோணேசப் பெருமானுடைய சன்னிதியில் சிறப்பு வாய்ந்த நல்ல பட்டு வஸ்திரங்களைக் கொய்து பிடித்தல், பத்திரம் புஷ்பங்கள் எடுத்தல், தூய்மையாக அவைகளை நிறைத்து வைத்தல், பிரகாசிக்கும் படி நிறைவாக விளக்கேற்றுதல், தளிசை தட்டுமுட்டுச் சாமான்களை பூசி விளக்குதல், தினமும் நெல்லுக்குத்தி சிறப்பாக அரிசி சேர்த்தல், சாணி தெளித்தல், விறகு சேர்த்தல், நடனமாடும் பெண்களுடைய நடனத்திற்கு இசைகருவிகளை வாசித்தல், பாடுதல், திருப்பொற் சுண்ணமிடித்தல், கொடி ஏற்றுதல், இறக்குதல், சந்தனம் அரைத்து கொடுத்தல் என்று குளக்கோட்டன் வரையறுத்திருந்தான்.

இக்குடிமக்கள் செய்யும் பணிகளுக்காக நீர்ப்பாய்ச்சலுள்ள பள்ளவெளி எனப்படும் நெல்விளையும் வயல்களை அவர்களுக்கு மானியமாகக் கொடுத்தான். அன்றியும் இந்த வரிப்பத்தாரில் சிறந்த ஐந்து குடிகளுக்குப் பண்டாரத்தார் என்ற கௌரவப் பட்டத்தையும் வழங்கியிருந்தான்.

கோணேசர் கல்வெட்டின் படி தம்பலகாமம்

கோணேசர் கோவிலில் அனுசரிக்கப்பட்டு வந்த தொழும்புகள் சிலவற்றை பண்டிதர்.இ.வடிவேல் அவர்கள் பட்டியல்படுத்தியுள்ளார். அதன்படி அடப்பன் தொழும்பு, புலவன் தொழும்பு, வைராவியார் தொழும்பு, மாலைக்கட்டித் தொழும்பு, இராச மேளம் அடிக்கும் தொழும்பு, பண்டாரியார் தொழும்பு, பண்டார வண்ணான் தொழும்பு, மண்ணுடையான் தொழும்பு (குயவன் தொழும்பு), நாவிதன் தொழும்பு, மூப்பன் தொழும்பு, ஆச்சாரியார் தொழும்பு, குடும்பன் தொழும்பு (மரமேறும் தொழில்) எனப் பல்வேறு தொழும்புகள் அங்கு காணப்படுகின்றன.

தொடரும் ...

எஸ்.பிரகாஷ் (MA)
ஆசிரியர்,
தி/ நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தப்பித்த சூர்யா - மாட்டிக்கொண்ட விஜய்

கத்தி படத்தினை தயாரிக்கும் நிறுவனமான லைகா மொபைல் யாருடையது என்ற கேள்வி காரணமாக புதுப்புது தகவல்கள் ஆதாரங்களுடன் வெளிவருவதைத் தொடர்ந்து இலங்கையின் மருமகன் என செல்லமாக அழைக்கப்படும் விஜய்க்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்நிறுவனம் அதிக சம்பளம் தருவதாக முதலில் சூர்யாவிடமே கால்ஷீட் கேட்டுள்ளது, இருந்தாலும் நிறுவனம் தொடர்பாக விசாரித்த சூர்யா அந்நிறுவனத்திற்கு கால்ஷீட் தர மறுத்துவிட்டாராம்.

# சினிமுரசு

## சினிமா குறுஞ்செய்திகள்

**• சூதுகவ்வும் இயக்குனரை ஏமாற்றிய சூர்யா**

அஞ்சான் பட முடிவுக்குப் பின்னர் நலன்குமாரசாமியின் படத்தில் நடிக்க ஒப்புக்கொண்ட சூர்யா பின்னர் மறுப்பு தெரிவித்துள்ளார். இதனையடுத்து அப்படத்தில் விஜய் சேதுபதி நடிக்க ஒப்புக் கொண்டுள்ளார்.



**• நயன்அதிர்ச்சியில்**

இறால் பிரியையான நயனுக்கு மருத்துவர்கள் இறாலை சிறிது காலம் தள்ளி வைக்குமாறு கூறியுள்ளனர். இறால் அதிகம் உணவில் சேர்ப்பதால் நயனுக்கு தோல் வியாதிகள் வரும் சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

**• ரோமியோ ஜூலியட்டில் நயனுக்கு இடமில்லை.**

ரோமியோ ஜூலியட் கதையைக் கேட்டதும் என் சம்பளத்தை எவ்வளவு வேணும் என்றாலும் குறைத்துக் கொள்ளுங்க நானே இந்தப் படத்தை நடித்துக் கொடுக்கிறேன் என்றாராம் நயன். இருந்தாலும் வித்தியாசமான ஜோடியாக இருக்க வேண்டும் என்பதற்காக ஹன்சிகாவை புக் செய்திருக்கிறார்கள் ரோமியோ ஜூலியட் குழுவினர்.


**• ஹிட் அடிக்கும் கோச்சடையான் கேம்ஸ்**

கோச்சடையான் படம் வெளிவர முன் கோச்சடையான் அனிமேஷன் கேம்ஸ் வெளிவந்துள்ளது. இது உலக அளவில் ஹிட்டான கேம் ஆக உருவாகி வருகின்றது.

**• மீண்டும் இந்தியில் அனுபாமா**

குணச்சித்திர நடிகையாக இருந்த அனுபாமா முப்பொழுதும் உன் கற்பனை படத்தில் மொட்டை அடித்துக் கொண்டு நடித்தார். தற்போது இந்தியில் மை ஸன் கை எனும் படத்தில் நடித்து வருகின்றார்.

## அண்ணனின் எதிர்ப்பிலும் தம்பியுடன் ரெட்டி



ரேடியோ வர்ணனையாளராக இருந்த ஸ்ரேயா ரெட்டி சாமுராய் என்ற படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகம் ஆனார். பின்னர் திமிறு, வெயில், பள்ளிக்கூடம், காஞ்சிவரம் போன்ற மிகக்குறைந்த படங்களே நடித்த அவர் விஷாலின் அண்ணன் விக்ரம் கிருஷ்ணாவை திருமணம் செய்துகொண்டு சினிமாவில் இருந்து விலகினார்.

திருமணத்திற்கு பின்னர் தயாரிப்பாளராக மாறிய ஸ்ரேயர் ரெட்டி தோரணை, வெடி, போன்ற திரைப்படங்களை தயாரித்தார். இரண்டு படங்களுமே படுதோல்வி அடைந்தது.

தயாரிப்பாளராக வெற்றி பெற முடியாததால் மீண்டும் நடிக்க முடிவு செய்துள்ளார் ஸ்ரேயா ரெட்டி. விஷாலின் அடுத்த படமான பூஜை படத்தில் முக்கிய கேரக்டர் ஒன்றில் ஸ்ரேயா ரெட்டி நடிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது. ஸ்ரேயா ரெட்டி மீண்டும் சினிமாவில் நடிப்பதை விஷாலின் அண்ணன் விக்ரம் கிருஷ்ணா விரும்பவில்லை என்று கூறப்பட்டாலும், விஷால் தனது அண்ணியை நடிக்க வைப்பதில் விருப்பம் காட்டுவதாக கூறப்படுகிறது.

## சேரும் தமன்னா, ஆர்யா




தெலுங்கில் பிஸியாகி சில வருட இடைவெளிக்குப் பிறகு அஜித் ஜோடியாக வீரம் படத்தில் நடித்தார். அப்படம் வணிகரீதியில் பெரிய வெற்றியைப் பெற்றும் தமன்னாவுக்கு பெரிதாக நன்மை விளையவில்லை.

சிவா மனசுல சக்தி, பாஸ் (எ) பாஸ்கரன், ஒரு கல் ஒரு கண்ணாடி ஆகிய வெற்றிப்படங்களைக் கொடுத்த இயக்குநர் ராஜேஷ். கார்த்தியை வைத்து இயக்கிய அழகுராஜா படத்தின் படு தோல்வி காரணமாக கவிழ்ந்துபோனார். அவருக்கு லை..ப் கொடுக்கும் எண்ணத்தில் தன்னுடைய சொந்தப் படத்தயாரிப்பு நிறுவனம் மூலம் பாஸ் (எ) பாஸ்கரன் இரண்டாம் பாகத்தை தயாரிக்க உள்ளார் ஆர்யா.

இந்தப் படத்தில் ஆர்யாவுக்கு ஜோடியாக, நயன்தாரா நடிக்க உள்ளார் என முதலில் செய்திகள் வெளிவந்தன. ஆனால், ஆர்யாவுக்கு ஜோடியாக தமன்னா நடிக்க உள்ளார். இருவரும் ஜோடி சேருவது இதுவே முதல் முறை.

## மான் கராத்தே – ஒரு பார்வை

ஏ.ஆர்.முருகதாஸின் கதை, அனிருத்தின் இசை, சிவகார்த்திக்கு ஹன்சிகா மோத்வானி ஜோடியான படம், ஏ.ஆர்.முருகதாஸ் புரடக்ஷ்ன்ஸ் இணைந்து தயாரித்திருக்கும் திரைப்படம் என ஏகப்பட்ட பில்டப்புகளுடன் வெளிவந்திருக்கும் படம்தான் மான் கராத்தே! சண்டை போடாமல் சண்டையில் இருந்து தப்பிக்கும் உத்திதான் மான் கராத்தே எனும் பெயர்.



இரண்டு கையிலும் ஆசையாய் கோன் ஐஸை வாங்கிய நாயகி ஹன்சிகா மோத்வானி, ஷூ லேஸ் கட்டுவதற்காக அதை எதிர்படும் சிவகார்த்தியிடம் கொடுத்த போது சிவகார்த்தி ஒரு கோனை சற்றே நக்கி சுவைக்க, அதில் கடுப்பாகும் ஹன்சிகா, இரண்டு கோன்களையும் புதிதாக வாங்கித்தரச் சொல்லி அடம் பிடிக்கிறார். சிவகார்த்தி, இருபது ரூபாய் காசில்லாததால் வாங்கித்தர மறுக்கிறார். இதில் சிவகார்த்தி மீது செம கடுப்பாகி கிளம்பி போகிறார் ஹன்சிகா. இவ்வாறான இரண்டு சந்திப்புகளுக்கு பின் சிவகார்த்திக்கு, ஹன்சிகா மீது காதலோ காதல் அப்படி ஒரு காதல்!

வேலைவெட்டி இல்லாத சிவகார்த்தி, ஹன்சிகாவுக்காக நிறைய மாறுகிறார். சென்னை, ராயபுரம் பீட்டராக சிவகார்த்தி, இன்னும் நிறைய பீட்டர் விட்டு, ஹன்சிகாவை கவுத்திருக்கலாம். அதை விடுத்து மான் கராத்தே பாக்ஸர், அடி, உதை என ஆக்ஷனில் இறங்காமல் இறங்கி ரசிகர்களை கொல்லாமல் கொல்வது சற்றே உறுத்தல். பிரண்ட்ஸ் சென்டிமெண்ட், ஹன்சிகாவுடனான ரொமான்ஸ் உள்ளிட்ட விஷயங்களிலும், டான்ஸிலும் முந்தைய படங்களைக் காட்டிலும் வெளுத்து வாங்கி இருக்கிறார்.

ஹன்சிகா வழக்கம் போலவே செமக்யூட், அவருக்கு சிவகார்த்தி மீது காதல் வருவதற்கான காரணங்கள் தான் புரியாத புதிர். மான் கராத்தேயின் பெரிய பலம் அனிருத்தின் இசையும், எம்.சுகுமாரின் ஒளிப்பதிவும் பெரும்பலம். இவை இரண்டுக்காவும் மான் கராத்தேவை பார்க்கலாம், ரசிக்கலாம்!

மான் கராத்தே – மனதை கவருதே!

## 103 கோடி வசூல்



பாலிவுட்டில் கடந்த 2013ஆம் ஆண்டு வெளியாகி சக்கைபோடு போட்ட த்ரில்லிங் திரைப்படம் Special 26. இந்த படத்தில் அக்ஷயகுமார், காஜல் அகர்வால், மனோஜ் பாஜ்பாய், அனுபம்கேர் மற்றும் நீரு பாஜ்வா ஆகியோர் நடித்திருந்தனர். நீரஜ் பாண்டே இயக்கிய இந்த படம் பாலிவுட்டில் பெரும் வெற்றி பெற்றது.

இந்த படத்தின் தமிழ் ரீமேக் உரிமையை தற்போது திருப்பதி பிரதர்ஸ் லிங்குசாமி பெற்றுள்ளார். இந்த படத்தில் அக்ஷயகுமார் நடித்த வேடத்தில் விக்ரம் நடிப்பது உறுதியாகியிருக்கின்றது. அனுபம்கேர் வேடத்தில் சத்யராஜ் நடிக்கின்றார். காஜல் அகர்வால் தமிழ் ரீமேக்கிலும் நடிக்கிறார். விக்ரமுடன் காஜல் அகர்வால் முதன்முறையாக இணைகிறார். இந்த படத்தை லிங்குசாமியே இயக்குகிறார்.

ரூ.42 கோடியில் தயாரான Special 26, பாலிவுட்டில் அதிக தியேட்டர்களில் வெளியாகி மொத்தம் ரூ.103கோடி வசூலித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## இதுவும் பாட்டோ!!



நடிகை, பின்னணி பாடகி என ஒரே நேரத்தில் இரண்டு துறைகளிலும் வெற்றிபெற்றவர் ஆண்ட்ரியா. பாட்டுபாடப்போன இடத்தில் அவரைவிட வயதில் குறைந்த இசையமைப்பாளர் அனிருத் உடன் காதல் ஏற்பட்டு தன் உதட்டைக் கவ்வக் கொடுத்தவர் என்ற 'நல்லபெயர்' இவருக்கு உண்டு. சமீபகாலமாக ஆண்ட்ரியா வாயைத் திறந்து பேச ஆரம்பித்தால் வகைதொகையில்லாமல் சகட்டுமேனிக்கு கெட்ட வார்த்தைகள் வந்து விழுகிறதாம். ஆங்கிலத்தில் உள்ள அத்தனை கெட்ட வார்த்தைகளும் ஆண்ட்ரியாவுக்கு அத்துப்படியாம். அவர் பேச ஆரம்பித்தால் அருகில் இருப்பவர்கள் காதை பொத்திக் கொள்கிறார்களாம். இதில் வேடிக்கையான விடயம் கெட்ட பையன்களான சில ஹீரோக்களே ஆண்ட்ரியாவின் கெட்ட வார்த்தையைக் கேட்டு அடிப்போய்விட்டனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச வீடு டிசைனுக்காக



வீடு டிசைன் செய்றவங்க அதை செய்வதற்கு உதவும் இந்த எளிய இலவச மென்பொருளை பயன்படுத்தலாம். இந்த மென்பொருளை கையாள்வது மிகவும் எளிது. இதனை ப்யன்படுத்தி நீங்களே உங்களுக்கு பிடித்த தேவையான கனவு இல்லத்தை உருவாக்கிக் கொள்ளலாம்.

## ஆன்ட்ரொயிட் மொபைல்



Smart Phones இன் வருகையை தொடர்ந்து Android இயங்கு தளத்துக்கான (OS) கேள்வியும் அதிகரித்துள்ளது. இந்த காலத்தில் எங்கு பார்த்தாலும் Android என்ற அளவுக்கு அதன் வேகமும், வளர்ச்சியும் உயர்ந்துள்ளது. இங்கு நாம் பார்க்கப்போகும் விஷயம் Android OS உபயோகிப்பார்களுக்கு மிக மிக அவசியமான ஒரு விஷயம். அது தான் Android Secret Codes அல்லது Android Magic Codes.

இந்த Codes மூலம் உங்கள் Android இயங்கு தளத்தைப் பற்றிய பல்வேறு விஷயங்களை அறிய முடியும். மேலும் புதிய Android mobiles வாங்குபவர்களுக்கு மிக அவசியமாகும். சில Codes மூலம் Camera, Touch Input, Various Sensors, Wi Fi, Bluetooth போன்றவை Mobile இல் சிறப்பாக வேலை செய்கின்றனவா என சரி பார்த்துக்கொள்ள முடியும்.

## 'COFFEE TABLE'



கடந்த காலத்தில் மைக்ரோசொப்டின் விண்டோஸ் இயங்குதளத்துடன் கூடிய Ideum Platform எனும் காப்பி டேபிள் (Coffee Table) அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் தற்போது கூகுளின் அன்ரோயிட் இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டதும் 46 அங்குல அளவுடையதுமான மல்டி டச் காப்பி டேபிள் அறிமுகம் செய்துள்ளது. இதன் திரையானது 1920 x 1080 Pixel Resolution உடையதாகக் காணப்படுவதுடன் Quad Core 3.7GHz Intel Processor, பிரதான நினைவகமாக 16GB RAM மற்றும் சேமிப்பு நினைவகமாக 500GB கொள்ளளவு என்பனவும் தரப்பட்டுள்ளது. இதன் விலையானது 7,000 டொலர்கள் ஆகும்.

## திருமண அல்பத்திற்காக




திருமணம் என்பது இரு மனங்களும், இரு உடல்களும் ஆத்மார்த்தமாக இணைந்து நீண்ட தூரம் செல்லும் இனிய பயணம். ஒரு நாள் திருமண நாள் என்று இல்லாமல் வாழ்வில் இது மிகப் பெரிய மகிழ்சியானதும் மாற்றத்தை உண்டு பண்ணக் கூடியதுமான ஒரு நிகழ்ச்சி அதனால் தான் திருமண புகைப்பட ஆல்பங்களை உயிருடன் தனிப்பட்ட நினைவுக்களை வைத்து அழகாக்குவது முக்கியம். அதற்காகவே ஒரு புதிய மென்பொருள் உங்கள் அழகிய தருணங்களை வாழ்நாள் முழுவதும் இரசிக்கும்படி செயவதற்காக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.




### நீண்ட கணனிப் பாவனையால் -

## எலும்பு நோய்




கணினியில் அதிக நேரத்தை செலவிடும் சிறுவர்களின் எலும்புகள் பலவீனமாகக் கூடும் என்றும் இதனால், ஆஸ்டியோபொராசிஸ் மற்றும் எலும்புமுறிவு போன்ற நோய்கள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளது என்றும் நார்வே ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். கம்ப்யூட்டரில் விளையாடுவது இன்று அதிகரித்துள்ளது. இவ்வாறு உட்கார்ந்த நிலையில் அதிக நேரத்தை செலவிடும் சிறுவர்களின் எலும்புகள் பலவீனமாகக் கூடும். உடலில் எலும்பிலிருக்கும் எலும்புத் தாது குறையும்போது, எலும்புகள் வலுவிழந்து முறிய நேரிடும். உட்கார்ந்தே பணியாற்றும் சிறுவர்களுக்கு எலும்புத் தாது அடர்த்தி குறைபாடு ஏற்படும் என்றும் இது பிற்காலத்தில் ஆஸ்டியோபொராசிஸ் மற்றும் எலும்புமுறிவு போன்றவற்றை அதிகரிக்கும் வாய்ப்புள்ளது என்றும் ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

பிறந்ததிலிருந்து எலும்புகள் வளர்ச்சியடைகின்றன. டீனேஜ் பருவத்தின் இறுதியில் உச்சகட்ட வளர்ச்சியைப் பெறுகின்றன. ஆனால், இந்த எலும்புத் தாது அடர்த்தி குறைபாடானது (Osteoporosis), எலும்புகளின் அதிகபட்ச வலிமை மற்றும் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்திவிடும். ஒருவரது உடல் எடையும் இத்தகைய குறைபாடுகளால் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக டிரோம்சோவில் உள்ள நார்வே ஆர்க்டிக் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஆன்னி விந்தர் கூறினார்.

## கூகுளில் தகவல்களைத் தேட

கூகுள் மட்டுமின்றி, பிங், பேஸ்புக், யு-ட்யூப், இ-பே போ்ன்ற பிற தளங்களிலும் ஏதாவது ஒரு தகவலை தினமும் தேடிக் கொண்டிருப்போம். இந்த தேடுதல்களின் போது, நாம் விருப்பப்படாத அல்லது தவிர்க்க விரும்பும் தகவல்கள் மற்றும் கோப்புகள் குறித்த முடிவுகள் நமக்குக் கிடைக்கும்.

இந்த தேடல்களில் நம் தேடல் முறைகளைச் சற்றுக் கவனத்துடன் கையாண்டால், நேரம் வீணாவதனைத் தடுக்கலாம்.




உங்கள் தகவல்கள் ஒரு சில பி.டி.எப். வகைக் கோப்புகளில் மட்டும் உள்ளது என எதிர்பார்த்தால் அல்லது டாகுமெண்ட் வகைக் கோப்புகளை மட்டும் தேடிப் பார்க்க எண்ணினால் இந்த வகையினும் வரையறை செய்திடலாம். computertips filetype:pdf எனத் தர வேண்டும்.

இந்தக் கட்டளைக்கு தேடும் தகவல்கள் உள்ள பி.டி.எப். பைல்கள் மட்டுமே தேடிக் காட்டப்படும்.

இதே போல் ps, doc, ppt, xls, rtf ஆகிய வகை கோப்புகளையும் வரையறை செய்து தேடலாம்.




**ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.**

எனவே தடயங்களை அவர்கள் அந்த அறையில் தேடும் பொருட்டு தமது கைகளுக்கு கையுறைகளை அணிந்து கொண்ட இருவரும் மிக நிதானமாக அவ்வறையைப் புரட்டிப் போடத் தொடங்கினார்கள்.

மெதுவாக...மிக மெதுவாக.. ஒவ்வொரு பொருட்களாகச் சல்லடை போட்டுக்கொண்டு அவர்கள் இரண்டு முக்கியமான தடயங்களைத் தம்மை அறியாமலேயே அந்த அறையினுள் நெருங்கிக்கொண்டு இருந்தார்கள்.

... அறையின் வாயிலில் இருந்து இடப்புறமாக அந்த காட்சிப் பொருள் வைக்கும் அலுமாரி (showcase)இருந்தது. அந்த அலுமாரியின் உட்பக்கமாக நிறையவே அழகுப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன... மேற்புறமாகவும் வைக்கப்பட்டிருந்தன அழகுப் பொருட்கள்....அதே வேளை மரவேலைப்பாடுகளைக் கொண்ட அந்த அலுமாரியின் மேற்புறத்தில் அழகான பெரிய யானையொன்றும் மரவேலைப்பாடுகளுடன் இணைத்துச் செதுக்கப்பட்டிருந்தது.

அப்பொருட்களை ஒவ்வொன்றாக அலசத் தொடங்கினர் புலனாய்வாளர்கள்..... உட்புறமாக அந்த அலுமாரியில் எவ்விதத் தடயங்களும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. மேற்புறமாக இருந்த பொருட்கள் ஒவ்வொன்றையும் அவர்கள் அலசி ஆராய்ந்த போதும் அவர்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை... எஞ்சிக் கிடந்தது அந்த யானை மட்டும் தான்.....

ஆனால் யானை அந்த மரவேலைப்பாடுகளைக் கொண்ட அலுமாரியுடன் இணைத்துப் பொழியப்பட்டிருந்ததால் அந்த யானை மீது எந்தச் சந்தேகமும் அவர்களுக்கு வரவில்லை. அதன் உடற் பாகங்கங் யாவும் மிருதுவாக்கப்பட்டு பளபளப்பாக்கப்பட்டிருந்தது. அதனால் உடற் பாகங்களுக்குள் எதனையும் ஒளித்து வைக்கும் வாய்ப்புக்கள் இல்லை என்பதை அவர்கள் உறுதியாகப் புரிந்து கொண்டார்கள்.... என்றாலும் அந்த யானை அவர்களுக்குத் தேவையான மிக முக்கியமான தடயம் ஒன்றைத் தன்னகத்தே வைத்திருந்தது. அதனைக் காட்டிக் கொடுத்தது ஒரு வெண்சுருட்டின் அடிப்பாகம்.........

அந்த அலுமாரியின் மீதான முன்புறச் சோதனைகளை முடித்துக் கொண்டு புலனாய்வாளர் ஒருவர் அந்த அலுமாரியின் பின் புறத்தை பார்க்கச் சென்றார். சுவரோடு நெருக்கி வைக்கப்பட்டிருந்த அந்த அலுமாரியின் பின்புறத்தில் எந்தப் பொருட்களையும் ஒளித்து வைக்கக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக அவருக்குப் படவில்லை.

எனினும் தனது மின்ஒளி வழங்கியை (Torch) உயிர்ப்பித்து அவர் பின்புறமாக சுவருக்கும் அலுமாரிக்கும் இடையில் இருந்த நுண்ணிய இடைவெளியில் ஒளியைப் பாய்ச்சிய போது அங்கு.... ஒரு வெண்சுருட்டின் அடிப்பாகம் ஒளிந்து கிடந்ததை அவர் கண்ணுற்றார்.....

அலிக வெண்சுருட்டைப் புகைக்கும் வழக்கம் உள்ளவன் என்பது ஏற்கனவே அவர்களுக்குத் தெரிந்தவிடயம் தான்.

கொலை நடந்த இடத்தை அவர்கள் சோதனையிட்ட போது அக் கொலை நடந்த இடத்திற்கு அருகில் இருந்த மதில் மூலையில் புகைத்தெறியப்பட்ட பல வெண்சுருட்டுக்களின் அடிப்பாகங்களைக் கைப்பற்றியிருந்தது அவர்களுக்கு ஞாபகம் இருந்தது. கைப்பற்றப்பட்ட அவையும் மரபணுப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டிருந்தன.

இப்போது கிடைக்கும் வெண்சுருட்டின் அடிப்பாகம் யாரால் புகைக்கப்பட்டதாக இருக்கலாம்.....? என்ற கேள்வி அப்புலனாய்வாளரின் கவனத்தை திருப்பியது. அவ்வடிப்பாகம் அலிகவினால் புகைக்கப்பட்டதாக இருப்பதற்கே பெரும்பாலும் சாத்தியப்பாடுகள் இருந்தன. ஆனால் அது வேறு ஒருவருடையதாயின் அவருக்கும் இந்த கொலைக்கும் ஏதாவதொரு தொடர்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்குமா? என்பதை அவரது புலனாய்வு எண்ணம் கேள்வியாகக் கேட்டுக்கொண்டிருந்தது. அவ்வடிப்பாகம் டொடி யின் உடையதாக இருந்தால்?.....

அவர் அந்த அடிப்பாகத்தை எடுத்து பத்திரப்படுத்திக்கொள்ளவே விரும்பினார். தனது மின்ஒளி வழங்கியை அணைத்துவிட்டு மற்றைய புலனாய்வாளரைத் தேடித் தலையைத் திருப்பிய போது அவர் மற்றொரு...முக்கிய தடயத்தைத் தரக்கூடிய எந்திரத்தை இயங்கச் செய்வதற்கான முயற்சியில் இறங்கியிருந்தார்.

அவரை அழைத்துக்கொண்டு அந்த அலுமாரியினை அறக்குவதற்கான முயற்சியில் இருவரும் இறங்கினர். அவர்கள் அந்த வெண்சுருட்டின் அடிப்பாகத்தை தடயமாக நினைத்துக்கொண்டே அந்த ஆலமாரியை அரக்க முயன்றனர். ஆனால்..... முக்கிய தடயமொன்று அலுமாரியின் மேல் புறத்தில் அவர்களுக்காக் காத்துக் கிடந்தது....

அலுமாரி மிகப் பாரமாக இருந்தது. தரமான மரத்தில் தயாரிக்கப்பட்ட அந்த அலுமாரியை முன்புறமாக நகர்த்துவதில் அவர்கள் இருவரும் சிறிது சிரமப் பட்டார்கள். தூக்கி நகர்த்துவது என்பது சாத்தியமாகப் படவில்லை. எனவே இருவரும் ஒரு சேர அலுமாரியை முன்புறமாக அரக்க முயன்றனர்.

இரண்டு தடவைகள் சரியாக நகர்ந்த அலுமாரியினை மூன்றாவது தடவை இருவரும் சேர்ந்து நகர்த்த முற்பட்ட போது ஒரு புலனாய்வாளரின் கைத்தொலைபேசி மேலாடையின் பைக்குள் இருந்து தவறிவிழுந்தது. அவர் அலுமாரியை விட்டு தொலைபேசியைப் பிடிக்க... மற்றையவர் அலுமாரியைத் தள்ள நிலைதடுமாறிய அலுமாரி அதிர்ந்த போது அவ்வலுமாரியின் மேற்புறமாக செதுக்கப்பட்டிருந்த யானை .......

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டெனிஸ் தரவரிசை நடால், செரீனா முன்னிலை



உலக டென்னில் தரப்படுத்தலில் மீண்டும் முதலிடத்திற்கு ரபேல் நடால் மற்றும் செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் திரும்பியுள்ளனர்.

ஆடவர் பிரிவில் தனது அடுத்த நிலை வீரராக தரப்படுத்தப்பட்டுள்ள நோவாக் யாக்கோவிச்சுடன் கடும் சமரை எதிர்கொள்ளும் நடால் அவரை விட 2050 புள்ளிகள் அதிகமாகப் பெற்று 13730 புள்ளிகளுடன் முன்திகழ்கின்றார்.

மகளிர் பிரிவில் கோலோச்சும் செரீனா தற்போதும் தனக்கான முதலிடத்தைத் தக்க வைத்திருப்பது அவரது அசாத்திய திறமையை வெளிக்காட்டுகின்றது. அண்மையில் சார்லஸ்டோனில் நடைபெற்ற போட்டிகளின் தகுதிச்சுற்றிலேயே அவர் வெளியேற்றப்பட்டிருந்தாலும் அவரை விஞ்ச இன்னும் எவரும் டென்னிஸ் மகளிர் போட்டிகளுக்கு வந்து சேரவில்லை. அடுத்த நிலையில் இருக்கும் லீ னா 5000 புள்ளிகள் குறைவாக இருப்பது செரீனாவிற்குப் பலமானதாகக் காணப்படுகின்றது.

## மாகாணவிளையாட்டுக் குறுஞ்செய்திகள்

- 40 வருடங்களின் பின்பு சம்மாந்துறை தொழில்நுட்பக்கல்லூரியின் இல்ல விளையாட்டுப்போட்டி 40 வருடங்களுக்குப்பின் நடைபெற்றுவருகின்றன. இப் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி கடந்த வெள்ளிக்கிழமை நிறைவு பெற்றது. சிவப்பு இல்லம் (ஜ.எஸ்.ஓ), நீல இல்லம் (என்.வி.கியூ), மஞ்சள் இல்லம் (எஸ்.எல்.எஸ்), பச்சை இல்லம் (கியூ.எம்.எஸ்), ஆகியவற்றின் வீர, வீராங்கனைகள் போட்டிகளில் பங்குபற்றி வருகின்றனர்.

- கிழக்கு மாகாண பெண்கள் சாரணியத்தினரின் மூன்றுநாள் பயிற்சி பாசறையின் இறுதி நாள் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை இரவு மட்டக்களப்பு நாவலடி நாமகள் வித்தியாலயத்தில் இடம்பெற்றது. மூன்றுநாள் பாசறையின் இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை இரவு பாசறைத்தீ இடம்பெற்றது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு வலயக் கல்வி பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலர்கள் தாழங்குடா தேசியக் கல்வியற் கல்லூரி பீடாதிபதி, உபபீடாதிபதி, அதிபர்கள், ஆசிரியர்கள் பெற்றார்கள், பெண் சாரணிய மாணவிகள் பாசறை அனுமதிப் பத்திரம் வழங்கும் அதிகாரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.








## குறுஞ் செய்திகள்



- இந்திய அணி வீரர் தினேஸ் கார்த்திக், தமிழகத்தைச் சேர்ந்த விக்கெட்கீப்பர், பேட்ஸ்மேனான இவர், வரும் 16ம் தேதி துவங்கும் பிரிமியர் தொடரில் டில்லி அணிக்காக பங்கேற்க உள்ளார். இவரை டில்லி அணி ரூ. 12.5 கோடிக்கு ஏலத்தில் எடுத்தது. டில்லி அணி என் மீது 'அதிக நம்பிக்கை வைத்துள்ளது. அதிக பணம் முதலீடு செய்திருப்பதால் எதிர்பார்ப்பு இருக்கத்தான் செய்யும். இது எனக்கு நெருக்கடியும் ஏற்படுத்துகிறது. ஆனால், அதிக பணம் தருவதற்காகவோ அல்லது குறைவாக கொடுப்பதற்காவோ செயல்பட மாட்டேன். என் சிறப்பான திறமையை எப்போதும் வெளிப்படுத்துவேன் என்றார் அவர்.



- ஆஸ்திரேலியாவை சேர்ந்த நீச்சல் மன்னன் இயன் துரோப். 1998 முதல் 2004 வரை ஒலிம்பிக் போட்டியில் 9 பதக்கமும், உலக போட்டியில் 11 பட்டமும் பெற்றார். பல்வேறு உலக சாதனைகளை படைத்துள்ளார். இவருக்குத் தோள்பட்டை அறுவைச்சிகிச்சை சுவிஸ்லாந்தில் நடைபெற்றபோது ஏற்பட்ட கிருமித் தொற்றால் தனது இடது கையை இழக்கும் நிலைக்கு அவர் தள்ளப்பட்டுள்ளார்.



- இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் விளையாடி வரும் டேனியல் வியாட் எனும் வீராங்கனை இந்திய கிரிக்கெட் வீரர் கோலி தன்னை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று தன் காதலை வெளிப்படுத்தியுள்ளார். 22 வயதாகும் டேனியல் வியாட், சுழற்பந்து வீச்சாளராவார். அவர் தனது ட்விட்டர் வலைத்தளத்தில் கோலி என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள் என ட்வீட் செய்துள்ளார். டேனியல் வியாட் இங்கிலாந்து அணிக்காக 32 ஒருநாள் போட்டிகளிலும், 50 டி-20 போட்டிகளிலும் விளையாடியுள்ளார். தற்போது டி-20 உலகக்கோப்பைப் போட்டியில் இவர் விளையாடவில்லை.



# மலை முரசு குறுக்கெழுத்து புதிர் 005

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 15 | | ■ | 2 | | 16 |
| 3 | 17 | | | ய | 18 | 19 | 20 | |
| 4 ர | | 5 | | | | | | |
| | | ■ | | ■ | | ■ | | ■ |
| ■ | 6 | | 7 | 21 | ■ | 8 | | 22 |
| 23 | | ■ | ■ | | 24 | 9 | | |
| 10 | | | 25 | 11 இ | | | | |
| | | ■ | | | 12 | | 26 மா | ■ |
| 13 | | | | | 14 | | | |

### இடமிருந்து வலமாக

1. கிழக்கின் பிரசித்தமான நகரங்களில் ஒன்று - பழம் தரும் மரத்தின் தொடக்கம்
2. குயிலின் ஒலி
3. சத்திரியத்திற்கு எதிர்ச்சொல் - குழம்பியுள்ளது.
4. காயத்தின் ஒத்தசொல்
5. தில்லுமுள்ளை இப்படியும் சொல்லலாம் - குழம்பியுள்ளது
6. தமிழில் இதனைக் கதுவி என்பர்
7. மரத்தின் ஆதாரம் - தலைகீழாக உள்ளது
8. நிறையளக்கப் பயன்படுவது - தலைகீழாக உள்ளது
9. சட்னியைத் தொட்டுச் சாப்பிடும் காலை உணவு - குழம்பியுள்ளது
10. கண்ணாடியில் தோன்றுவது - தலைகீழாக உள்ளது
11. உரலில் செய்யும் வேலை - குழம்பியுள்ளது
12. சிங்கத்தின் ஒத்த சொல்
13. திரவத்தின் பண்டைய அளவை முறை குழம்பியுள்ளது
14. தமிழர்கள் இதற்காகப் போராடுகின்றார்கள் - கடைசி எழுத்து முன்வந்துள்ளது

### மேலிருந்து கீழாக

1. குரங்கு
6. கிருஸ்ணனின் அண்ணன் - குழம்பியுள்ளது
8. குழந்தைகள் விரும்பிப் பார்ப்பது
12. இது கடலில் உருவாகும்.
15. புராணம் பாடியவர்
16. குளிரைச் சொல்லலாம்
17. நீரை பெற்றுக்கொள்ளத் தோண்டுவது
18. நெருப்பைத் தொட்டால்...... - கீழிருந்து மேலாக உள்ளது
19. தொடக்க காலம்
20. இரவின் ஒத்த சொல் குழம்பியுள்ளது
21. ரம்மியமான காலமொன்றை இவ்வாறு அழைக்கலாம் - குழம்பியுள்ளது
22. கீழ்சாதி மக்களை குறிக்கும் மடமைத்தனமான சொல்
23. கம்பராமாயண ஆசிரியன்
24. காணாமற் போனோரைத் தேடி ................. - குழம்பியுள்ளது
25. அண்ணனுக்கு அடுத்தவன் - கீழிருந்து மேலாக
26 இதை வெட்ட கிழக்கில் தடையிருந்தது

## குறுக்கெழுத்து புதிர் 004 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | 18 த் | 19 ம | 20 நா | த | ன் | ■ | 2 ச | தி |
| டு | 3 உ | ச் | சா | ட | ன | ம் | ட் | ■ |
| 4 கை | 5 தி | 6 சா | க் | 21 கி | ர | ட் | டி | 22 ஸ் |
| 7 க் | ண | வ | 23 ம் | 27 க | ■ | ■ | ■ | வ |
| ■ | ■ | 8 தா | மி | ர | ம் | ■ | 24 வை | ர |
| 9 ம் | 28 ள | 17 ர | க | ண | ■ | 10 க | ள | ம் |
| 11 பு | தா | ம் | ■ | 12 ம் | 25 தி | பு | அ | ■ |
| ■ | 13 ம் | க | ண | 14 ண் | வி | ழ் | ■ | 26 மா |
| ■ | 15 ப் | பு | டு | சி | டு | 16 சி | ட் | டு |

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 250, ரூபா 150, ரூபா 100 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.


**போட்டி முடிவுத் திகதி : 17.04.2014**

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :**
**மலைமுரசு. இல — 159ஏ,**
**கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

1. அருகில் தரப்பட்டுள்ள திண்ம உருவை இரு துண்டுகளாக வெட்டினால், ஒரு துண்டில் காணப்படும்,



அ. முகங்களின் எண்ணிக்கை ..............................
ஆ. விளிம்பகளின் எண்ணிக்கை ..........................
இ. செங்கோண மூலைகளின் எண்ணிக்கை எத்தனை? ..........
ஈ. இதனை அமைப்பதற்கு தேவையான தளவுருக்கள் எவை? ......................

பின்வரும் பாடலை வாசித்து விடையளிக்குக.

சுத்தமுள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு. நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயள் பெறுவாயே.

கூழையே நீ குடித்தாலும்
குளித்த பின் குடியப்பா!
ஏழையே நீ ஆனாலும்
இரவில் நன்றாக உறங்கப்பா!

2. 'எங்கே சுகம் உண்டு' என கவிஞர் குறிப்பிடுகின்றார்?
3. இங்கு இடம்பெறும் வரிசை மொழி எது?
4. 'ஏழை' என்பதன் எதிர்ச்சொல்லைத் தருக.
5. கூழைக் குடிக்க முன்பு என்ன செய்ய வேண்டும்?
6. இப்பாடலுடன் தொடர்புடைய பழமொழியொன்றை எழுதுக.

7. ஒரு குவியலிலுள்ள 612 மாம்பழங்களை 9 பேருக்கு சமமாக பங்கிட்டால் ஒருவருக்கு 68 பழங்கள் கிடைத்தன. அப்பழங்களை 6 பேருக்கு சமமாக பங்கிட்டால் ஒருவருக்கு எத்தனை பழங்கள் கிடைக்கும்?

8. மீன் சந்தையொன்றில் மீனை வாங்கும் போது கவனிக்க வேண்டிய பிரதான விடயம் யாது?
1. மீனின் விலை 2. மீனுக்கு ஐஸ் போடப்பட்டமை
3. மீன் வகையிலுள்ள போசணைப் பெறுமானம்
4. மீன் பழுதடைந்துள்ளதா என சோதித்தல்.

9. எதிர்கால தேவைக்காக உணவைத்தேடி களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் பிராணிகள் கொண்ட கூட்டம் எது?
1. கறையான், குளவி, தேனீ 2. எறும்பு, குளவி, தேனீ
3. தேன்குருவி, எறும்பு, தேனீ 4. கறையான், எறும்பு, தேனீ

10. இலங்கையின் தேசிய இலட்சினையை வரைந்த ஓவியர் யார்?
1. ஞ.னு.செனவிரெத்ன 2. ஜானக பெரேரா
3. டி.பி.ஜயதிலக 4. ரிச்சட் பத்திரன

11. பின்வரும் கருத்திற்கு பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக.
அ. பொருள், பண்டம் எல்லாவற்றையும் இழந்து வேறொரு இடத்தில் வசிப்பவன் ..........................
ஆ. வித்தை பயின்ற மாணவர்கள் ஆசிரியருக்கு கொடுக்கும் காணிக்கை .......

12. ஒரு பையினுள் 8 சிவப்பு நிற மாபிள் குண்டுகளும், 3 மஞ்சள் நிற மாபிள் குண்டுகளும் உள்ளன. இதில் ஒரு மஞ்சள் நிற மாபிள் குண்டை குறைந்தது எத்தனையாவது தடவை எடுக்கலாம்?
1. 8 2. 9 3. 10

13. ஓர் எண்ணுடன் 5ஐக் கூட்டி வரும் விடையை 3ஆல் பெருக்கி, வரும் விடையிலிருந்து 2ஐக் கழித்தால் வரும் விடை 43 எனில், அந்த குறித்த எண் யாது?
1. 10 2. 15 3. 23

14. நீண்ட ஒட்டும் தன்மையான நாக்கைக் கொண்ட பிராணி எது?
1. தவளை 2. முதலை 3. பாம்பு 4. பல்லி

15. நாயும், பூனையும் வயிற்றுக் கோளாறு உள்ளபோது உண்ணும் மூலிகைகள் முறையே
1. பால் அறுகு, குப்பைமேனி 2. குப்பைக்கீரை, நீர்முள்ளி
3. குப்பைமேனி, பால்அறுகு 4. கிடைச்சி, வேம்பு



புலமைப் பரிசில் வழிகாட்டல்
ஆசிரியர் திரு.ந.மனோகரன்

## விளையாடு!



தம்பி தம்பி விளையாடு!
தமிழால் பேசி விளையாடு!
நம்பிக்கிடப்போம் விளையாடு!
நாளை வளர்வாய் விளையாடு!

பந்தும் துடுப்பும் விளையாடு!
பசுவும் புலியும் விளையாடு!
வந்தே பாண்டி விளையாடு!
வளைந்தும் நிமிர்ந்தும் விளையாடு!

அக்காவோடும் விளையாடு!
அண்ணாவோடும் விளையாடு!
நிற்காதோடி விளையாடு!
நீளம் பாய்ந்தும் விளையாடு!

அப்பாவோடும் விளையாடு!
அம்மாவோடும் விளையாடு!
எப்போதும் படி - விளையாடு!
இசையும் பாடு - விளையாடு!

## எம் உயிர் எழுத்து

தடுக்கி விழுந்தால் மட்டும் அ.. ஆ..
சிரிக்கும் போது மட்டும் இ.. ஈ..
சூடு பட்டால் மட்டும் உ... ஊ..
அதட்டும் போது மட்டும் எ.. ஏ..
ஐயத்தின் போது மட்டும் ஐ...
ஆச்சர்யத்தின் போது மட்டும் ஒ.. ஓ..
வக்கணையின் போது மட்டும் ஒள...
விக்களின் போது மட்டும் ஃ..
என்று தமிழ் பேசி மற்ற நேரம்
வேற்று மொழி பேசும்
தமிழர்களிடம் மறக்காமல் சொல்
உன் மொழி தமிழ் மொழியென்று!!!

தாமரைச் செல்வன் சச்சிதா - கிளிநொச்சி

## சிறுவர் முரசு



## சிந்திக்க .. ..

**வெறும் கை என்பது மூடத்தனம் : விரல்கள் பத்தும் மூலதனம்.**

## குழந்தையின் இருமலை நிறுத்தக் கூடாது

இருமலுக்கான தொடு நரம்புகள் காதிலும் உண்டு. அதனால்தான் காது குடையும் போது இருமல் வருகிறது. குழந்தைகளுக்கு முற்றிலும் இருமலை கட்டுப்படுத்தக் கூடாது. எதனால் இருமல் வருகிறது என்று பார்த்து அதற்கு வைத்தியம் செய்ய வேண்டும். வறட்டு இருமல், தொண்டை வலி இருந்தால் இருமல் மருந்து தரலாம். தூக்கம் இல்லாமல் இருமுதல், பால் குடிக்க முடியாமல் இருமல், இருமலின் முடிவில் வாந்தி ஆகிய நேரங்களில் மருந்து தரவேண்டும்

மூக்கின் முன்புறம் நீர் வடிவது போல, மூக்கின் பின் புறமும் தொண்டையில் நீர் வடியும் இதனால் இருமல் வந்துகொண்டே இருக்கும். இதற்கு மூக்கு சொட்டு மருந்து போட்டாலே இருமல் குறைந்து விடும்.

சைனுசிடிஸ் என்ற நிலையிலும் சைனசில் இருந்து நீர், சளி கசிவதால் தொடர்ந்து இருமல் இருக்கும். இதற்கு, வெண்ணீரில் உப்பு போட்டு வாய் கொப்புளிக்க வேண்டும். மூக்கிற்கு சொட்டு மருந்து போட்டு வரவேண்டும்.

வெந்நீரில் ஆவி பிடிக்கவேண்டும். எண்ணெய் தேய்த்து குளிப்பாட்டுவதை தவிர்க்கவேண்டும்.

சளி மஞ்சளாகவோ, பச்சையாகவோ, கெட்டியாகவோ மாறும்போதும், மூச்சு விடும் வேகம் அதிகரிக்கும் போதும் வைத்தியரை அணுகுதல் மிகச்சிறந்தது ஆகும்.


முற்றும்.. ..

## வேஷம் நிலைக்காது

குட்டிக் கதை

ஒரு ஏரியில் நிறைய மீன்களும் பாம்புகளும் வாழ்ந்து வந்தன. முதலில் நட்பு பாரட்டி இந்த இரண்டு இனங்களும் வாழ்ந்து வந்தன. பருவமழை பொய்த்து ஏரி வற்ற ஆரம்பித்ததும் இடத்துக்குச் சண்டை போட்டு ஏரியைப் பிரித்துக் கொண்டு வாழ்ந்தன. ஒரு இனம் வாழும் இடத்திற்கு மற்றொரு இனம் போகக் கூடாது. மீறினால் எதிரியின் கையில் சரியான அடி கிடைக்கும்

இதில் ஒரு விலாங்கு (eel) மட்டும் தந்திரமாக வேஷம் போட்டு ஏரி முழுவதும் சுற்றி வந்து கொண்டிருந்தது.



பாம்புகள் இடத்திற்குப் போகும் போது விலாங்கு தன் நீண்ட உடலையும் பாம்பு போன்ற தலையையும் வைத்து தான் ஒரு பாம்பு என்று காட்டிக் கொள்ளும்.

மீன்களின் இடத்திற்குப் போகும் போது உடலைச் சுருட்டி மீன் போன்ற துடுப்புகளையும் வாலையும் காட்டி தான் ஒரு மீன் என்று காட்டிக் கொள்ளும்.

இப்படி ஏமாற்றியே பொழுதை ஓட்டிக் கொண்டு இரண்டு இடங்களிலும் உணவு பெற்று ஏரி முழுவதும் சுற்றித் திரிந்து வந்தது விலாங்கு.

வெயில் காலம் அதிகமானது. ஏரி மேலும் வற்றியது. பாம்புக் கூட்டமும் மீன் கூட்டமும் தங்கள் இடங்களை நெருக்கியும் குறுக்கியும் அமைத்துக் கொண்டே வந்தன.

ஒரு நாள் இரண்டு கூட்டங்களும் ஒன்றன் இருப்பிடத்தை இன்னொன்று பார்த்துக் கொள்ளும் தூரத்தில் அமைக்கும் நிலை வந்தது.

அவ்வளவு காலமும் சுதந்திரமாக தன் வேஷத்தை மாற்றிக் கொண்டு சுற்றித் திரிந்த விலாங்குக்கு விதி விளையாடத் தொடங்கியது. அப்போது மீனாக விலாங்கு வேஷம் போட்டால் பாம்புகள் பார்த்து தாக்கின. பாம்பாக வேஷம் போட்டால் மீன்கள் கடித்துக் குதறின.

"நான் பாம்பும் அல்ல மீனும் அல்ல" விலாங்கு எவ்வளவோ கதறியது, கெஞ்சி மன்றாடியும் கேட்டுப் பர்த்தது. பலனில்லை. அங்கு விலாங்கை நம்புவாரில்லை. தான் இவர்களிடத்தில் "முதலிலேயே உண்மையைச் சொல்லியிருக்கலாமோ" என்று நினைத்துக் கொண்டு செத்தே போனது.

முற்றும்.. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

1. 2/3 - 1/3

2. (+5) - (+7)

3. 5 : 8 = 10 : ........

4. 5.3 x 9

5. 81 ஐ 3 இன் வலுவில் தருக.

6. நிலைத்த புள்ளியிலிருந்து மாறாத் தூரத்தில் அசையும் புள்ளியின் பாதை யாது?

7. y = -3x - 5 இல் x இன் குணகம் யாது?

8. 1 மணித்தியாலத்திற்கு 120 km ஆயின், 1 நிமிடத்திற்கு .............

9. 2, 4, 6, 8, .........., ............

10. x + x + x + x = ....................

11. (-6) + (-3) = ...................

12. 16 + 8 = 12 + ...............

13. 9000mg = .....................g

14. 1226ml இல் பத்தினிடத்து இலக்கம் ..................

15. 15/2 x 16 எத்தனையாம் முக்கோண எண்

16. 5 3/5 ஐ முறைமையில்லாப் பின்னமாக எழுதுக.

17. அகக் கோணம் ஒன்றின் பருமன் r ஆகவுள்ள ஒழுங்கான பல்கோணியின் பக்கங்களின் எண்ணிக்கை n ஆயின், r = 180(1-2/n) என நிறுவுக.

18. காதரிடமிருந்த பணத்திற்கும், சீலனிடமிருந்த பணத்திற்கும் இடையேயான விகிதம் 9 : 11 ஆகவும் காதரிடமிருந்த பணத்திற்கும் சுரேனிடமிருந்த பணத்திற்கும் இடையேயான விகிதம் 12 : 17 ஆகவும் இருப்பின்,
   1. காதர், சீலன், சுரேன் ஆகியோரிடம் காணப்படும் பணத்திற்கான தனி விகிதத்தைக் காண்க.
   2. சீலன் ரூ 3300 ஐ வைத்திருந்தான் எனின், காதர், சுரேன் வைத்திருந்த பணத்தொகைகளைக் காண்க.

19. வட்ட அடியின் பரப்பளவு $616cm^2$ ஆகவுள்ள திண்ம உருளை ஒன்றின் உயரம் 75cm எனின்,
   1. அதன் வட்ட அடியின் ஆரையைக் காண்க.
   2. வளைந்த மேற்பரப்பளவைக் காண்க.
   3. மொத்த மேற்பரப்பளவைக் காண்க.

20. காரணியறிவைப் பயன்படுத்தி சுருக்குக.
   அ. 77 x 13 + 13 x 23 ஆ. 237 x 25 - 37 x 25
   இ. 199.3 x 200.7

21. பின்வரும் மூவுறுப்புக் கோவைகளை நிறைவர்க்கக் கோவைகளாக எழுதுக.
   அ. $x^2 + 8x + 16$ ஆ. $y^2 + 14y + 49$
   இ. $a^2 - 18a + 81$ ஈ. $2x^2 - 8x + 8$

22. முடிவுறும் தசமமும், மீளும் தசமமும் அல்லாத மாறிலி ஒன்றைக் குறிப்பிடுக. அம்மாறிலி விகிதமுறும் எண்ணா அல்லது விகிதமுறா எண்ணா?

23. சதுரமொன்றின் பக்க நீளத்தின் மூன்று மடங்குடன் 5 ஐக் கூட்ட வருவதும், பக்க நீளத்தின் இரண்டு மடங்கிலிருந்து 3 ஐக் கூட்ட வருவதுமான நீள, அகலங்களைக் கொண்ட செவ்வகத்தின் பரப்பளவைக் காண்க?

24. ஆரம்பப் பெறுமதி ரூ 650,000 ஆகவுள்ள வாகனம் ஒன்று வருடந்தோறும் 1/5 பங்கினால் தேய்மானம் (குறைவு) அடைகிறது. 3 வருடங்களின் பின் இவ்வாகனத்தை வாங்கும் ஒருவர் நியாயமாகச் செலுத்த வேண்டிய விலை யாது?

25. சதுர வடிவப் பலகை ஒன்றின் பரப்பளவு 246 எனின், அதன் பக்க நீளத்தைக் காண்க.

**கணிதம் வழிகாட்டல் : திருமலையின் பிரபல**

**MATHS**
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
**T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
G.C.E (O/L) பிரதி சனி தோறும்
பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

எமது கல்வி நிலையத்தில் கற்று சிறந்த பெறுபேறுகளை எடுத்த அனைத்து மாணவர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.
கடந்த வருடம் க.பொ.த (சா/த) இல் சித்தியடைய தவறிய மாணவர்களுக்கான புதிய வகுப்புக்கள் 16.04.2014 அன்று ஆரம்பமாகின்றது.

## பாடம் : தமிழ்

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து கோடிடுக.

1. அரை மாத்திரை பெறும் எழுத்து
   1. மகரக்குறுக்கம் 2. ஆய்த குறுக்கம் 3. குற்றிய லிகரம் 3. உயிரளபெடை 5. ஐகாரகுறுக்கம்

2. பகர மெய் தன்னுடன் தான் மயங்கும் சொல்
   1. அம்பு2. பாடம் 3. கரிப்பு 4. பாம்பு 5. பட்டம்

3. கடியரை மகளிர்க்கே கைவிளக்காகி ............ இதில் கடி உரிச்சொல் என்ன பொருளில் வந்துள்ளது?
   1. காவல் 2. சிறப்பு 3. மிகுதி 4. கரிப்பு 5. அச்சம்

4. தசை என்பது சதை என்று வழங்குவது
   1. மரூஉ 2. குழுஉக்குறி 3. இலக்கணப்போலி 4. மங்கலம் 5. இடக்கரடக்கல்

5. மகர ஈற்றுப் பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும் பெறும் சாரியை
   1. அத்து 2. அற்று 3. அம் 4. இன் 5. அன்

6. நீ வராமல் விட்டிருந்தால் அவன் கவலைப்பட்டிருப்பான். இவ் வாக்கியத்தில் 'நீ வராமல் விட்டிருந்தால்' என்பது
   1. எச்சத்தொடர் 2. நிபந்தனை எச்சத்தொடர் 3. வினை எச்சத் தொடர் 4. எதிர்மறை நிபந்தனை எச்சத்தொடர் 5. வேற்றுமை தொடர்

7. இடைச்சொற்றொடராக வருவது
   1. கமலன் வந்தான் 2. ஒடி ஒடி 3. மற்றும் பலர் 4. பாடிய பறவை 5. கத்தியால் வெட்டினான்

8. எல்லோரும் படித்து கொண்டிருந்தனர். அவனோ பாடிக் கொண்டிருந்தான். இங்கு ஓ இடைச்சொல் குறிக்கும் பொருள்?
   1. வினாப்பொருள் 2. பிரிநிலைப்பொருள் 3. தெரிநிலைப் பொருள் 4. மிகைப்பொருள் 5. ஐயப்பொருள்

9. இரு என்பதன் செய்து என்னும் வாய்ப்பாட்டு வினைஎச்சம்?
   1. இருக்க 2. இருந்தால் 3. இருந்த 4. இருப்பு 5. இருந்து

10. யகர உடன்படு மெய்யாக புணர்ந்த சொல்
   1. எலியால் 2. பூவால் 3. பசுவால் 4. பலாவால் 5. பூவை

11. பின்வருவனவற்றுள் ஆக்கப் பெயர்களை மட்டும் கொண்ட தொகுதி
   1. பாடுதல், நட்பு, கோபம்
   2. முதலாளி, கடற்கரை, பாடம்
   3. புத்திசாலித்தனம், பாம்பு, குரவி
   4. அன்னாசி, கோடாலி, அலவாங்கு
   5. கடுப்பு, நடை, ஆட்சி

12. இருபாற் பொதுப்பெயராக வருவது
   1. வேள் 2. மாது 3. ஆடூஉ 4. நோயாளி 5. குரிசில்

13. பெயரடியாகப் பிறந்த தெரிநிலை வினைப்பதம்
   1. பாடினான் 2. ஓடினான் 3. சித்திரித்தான் 4. போன்றான் 5. மாண்டான்

14. போர்த்துக்கேய மொழிச் சொல்லாக மட்டும் வருவது
   1. ஊதுபத்தி, குத்தகை, கசாப்பு
   2. யவனர், வசூல், கன்னல்
   3. கோப்பி, சீமெந்து, அன்னாசி
   4. தோம்பு, துட்டு, ஏலம்
   5. அலமாரி, கடுதாசி, கோப்பை

15. பெயரெச்ச விகுதிகள் எவை
   1. அ, உம் 2. தல், அல் 3. இன், அன் 4. கள், மார் 5. இல், ஆல்

16. மெய் முன் மெய் புணர்ந்து மகரம் கெடும் புணர்ச்சி
   1. நீலம் + வானம் 2. வட்டம் + கல் 3. வாரணம் + ஆயிரம் 4. ஆகாயம் + கப்பல் 5. மகரம் + புணர்ச்சி

17. தகாத செயல் என்ற பொருளை குறிக்கும் மரபுத் தொடர்?
   1. எடாதவெடுப்பு 2. கசகரணம் போடுதல் 3. துறை போல 4. வாயடங்கல் 5. வால் முறுக்குதல்

18. குற்றியலுகர புணர்ச்சி
   1. காளை 2. மார்பை 3. பூவை 4. வாளை 5. சீலை

19. நல்குரவு என்பதன் பொருள்
   1. நன்மை 2. வீரம் 3. பகைமை 4. வறுமை 5. வெற்றி

20. இரு வருடப் பூர்த்தியின் போது கொண்டாடப்படும் விழா
   1. பருத்தி விழா 2. காகிதவிழா 3. மணிவிழா 4. பால்விழா 5. நீர் விழா

ஆசிரியர் :
திரு.சி.பிரகாஷ், BA, PGDT, MA
தி/ நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடத்தல்....

அளிக்கவில்லை என்பதைத் தெரிந்து கொண்ட பெற்றோர் மகனைத் தேடத் தொடங்கிய போதே தெருவோரத்தில் கிடந்த சைக்கிளை மீட்டெடுத்துள்ளனர். தொடர்ந்து தேடுதலில் ஈடுபட்ட பெற்றோர் மகனைக் காணாத போது தம்பலகாமம் 96 பிரதேசத்தில் தமது மகன் பாதுகாப்பாக இருப்பதாகச் செய்தி கிடைத்ததாகவும் அங்கு சென்று தமது மகனை மீட்டு வந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

"வானுக்குள் தூக்கியவுடன் எனது வாயை அடைத்துவிட்டார்கள். சாரதியுட்பட நால்வர் அந்த வானுக்குள் இருந்தார்கள். எல்லோரும் சிங்கள மொழியிலேயே தமக்குள் உரையாடினார்கள். ஆனால் வாகச் சாரதி திருநீறு போன்ற எதையோ நெற்றியில் பூசியிருப்பதைக் கண்டேன். எனக்குப் பணயம் செய்த பாதை தெரியவில்லை. ஆனால் மிகக் கரடு முரடான பாதையூடாகவே அந்த வான் பயணித்தது. வானைக் காடொன்றுக்குள் நிறுத்திவிட்டு நால்வரும் கைத்தொலைபேசியில் உரையாடுவதற்காக நால்வரும் இறங்கிச் சென்றார்கள். நான் உடடினயாகவே வானில் இருந்து குதித்து ஓடத்தொடங்கி விட்டேன். அவ்வாறு ஓடிய போது அண்ணா ஒருவரைச் சந்தித்தேன். அவருக்கு விபரங்களைக் கூறியபோது அவர் என்னை தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அவர்களே என்னைக் காப்பாற்றி அப்பா அம்மாவிடம் கையளித்தார்கள்" என கடத்தப்பட்டவர் தெரிவித்தார்.

தம்பலகாமம் 96 பள்ளிவாசல் ஊடாகவே குறித்த மாணவன் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டதாகவும் அப்பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் ஒன்றாகக் கூடி வெள்ளைவானைத் தேடியதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கடத்தலுக்குப் பயன்பட்டதாகக் கூறப்படும் வாகனத்தின் பதிவு இலக்கத்தையும் அந்த மாணவன் காவல்துறைக்கு வழங்கியுள்ளார். விசாரணைகள் தொடர்கின்றன.

## கிழக்கிலும் விசேட....

நீதிமன்றங்கள் இயங்குவதாகப் பாராளுமன்றில் தெரிவித்த நீதி அமைச்சர் ஹக்கீம் அவ்வாறான நீதிமன்றங்களை மாகாணங்கள் ஒவ்வொன்றிலும் அமைக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## கிழக்கில் நோர்வே....

குழு கடல் வள ஆய்வுப் பணிகளை சீனன்குடா, கிண்ணியா, தம்பலகாமம், வாழைச்சேனை, ஆரையம்பதி, காத்தான்குடி, கல்முனை, சம்மாந்துறை போன்ற பிரதேசங்களிலும் மேற்கொண்டுள்ளதுடன் அப்பிரதேசங்களில் கொடுவா மீன் வளர்ப்பை ஊக்குவிக்கத் தேவையான உதவிகளையும் அவர்கள் மீன்பிடித்துறைக்குப் பொறுப்பான கிழக்கு மாகாண அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# தேரரை மௌவி ஆக்குவோம்

### — பொதுபலசேனா —



வட்டரக்க விஜித தேரரின் காவியுடையை சட்டரீதியாக அகற்றி முஸ்லிம் பள்ளியொன்றில் மௌலவி வேளையில் இணைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

நேற்று கொழும்பு நிபோன் ஹோட்ட லில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜாதிக பல சேனாவின் முதலாவது சட்ட ரீதியான ஊடக வியலாளர் மாநாட்டை குழப்பியமை, வட்டரக்க விஜித தேரரை தாக்கியமை, அவதூறான வார்த்தைகளினால் ஏசியமை, அவரின் ஐந்து ஆவணங்களை பறிமுதல் செய்தமை தொடர்பில் நேற்று பிற்பகல் கொம்பனித் தெரு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு முன்னால் மகாநாயக தேரர்கள், பௌத்த தேரர்கள் மற்றும் பௌத்த மக்கள் ஆகியோரிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டு விட்டு, பொலிஸில் சென்று முறைப்பாடு செய்தாரென்றால், இதிலிருந்து தெரிகிறது இவர் யாருக்கு தேவையான முறையில் வேலை செய்கிறார் என்று. ஆகவே நாம் இப்பிரச்சினையை இத்துடன் நிறுத்திக் கொள்ளமாட்டோம். வட்டரக்க விஜித தேரரின் காவியுடையை சட்டரீதியாக அகற்றி முஸ்லிம் பள்ளியொன்றில் மௌலவி வேளையில் சேர்த்து விடுவதற்கு நாம் யோசித்துவருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய தடைப்பட்டி...

இலங்கைப் புலனாய்வுத்துறை மலேசியா சென்று நந்தகோபனைக் கைது செய்து இலங்கைக்குக் கொண்டு வந்துள்ளது.

மலேசிய ஆதரவுடன் கைது செய்யப்பட்ட மூன்றாவது விடுதலைப் புலிகளின் முக்கிய செயற்பாட்டாளராக நந்தகோபன் விளங்குகின்றார்.

ஏலவே குமரன் பத்மநாதன், அமேசியா ராஸன் ஆகிய இருவரும் மலேசிய உதவியுடன் கைதாகி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டது தெரிந்ததே.

அவர்கள் இருவருக்கும் வழங்கப்பட்டதைப் போன்ற சகல வசதிகளுடனுமான விசாரணைப் பொறிமுறையையே நந்தகோபனுக்கும் இலங்கை அதிகாரிகள் நடைமுறைப்படுத்துவதாகத் தெரிகின்றது.

புலம்பெயர் விடுதலைப் புலிகளின் கட்டமைப்பின் தளகர்த்தராகச் செயற்படும் நெடியவனின் துணைவராக நந்தகோபன் பணியாற்றியதாகவும் அவர் தென்கிழக்காசிய தகவல் கட்டமைப்பின் பொறுப்பாளராகப் பணியாற்றியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து தென்கிழக்காசியாவில் விடுதலைப் புலிகளின் வலைப்பின்னல் பற்றிய தகவல்கள் அரசிற்குத் தெரியவரும் எனவும் அதன் விளைவாக அப்பிராந்தியத்தில் வதியும் இலங்கையர் பலரது பெயர் புதிய தடைப்பட்டியலில் வெளியிடப்படலாம் எனவும் எதிர்கூறல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை இராணுவத் தரப்பின் பேச்சாளர், கைது செய்யப்பட்ட கபிலன் விசாரணைகளுக்கு நன்றாக ஒத்துழைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## நித்திலம்...

சிறப்பாக நடைபெற்றது.

பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சர் கௌரவ அல்ஹாஜ் நஜீப் அப்துல் மஜீத், சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.புஷ்பகுமார அவர்களும், கல்விமான்கள், கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்ததோடு மூவினத்தையூம் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கின அமைச்சர்...


போராட்டத்தினால் அழிவுற்றுள்ள கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வது

தொடர்பாகவும் கிழக்கில் ஈரானிய முதலீடுகளை அதிகரிப்பது தொடர்பாகவும் இக்கலந்துரையாடல் அமைந்திருந்ததாகத் தெரிகின்றது.

கிழ்க்கில்வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக அமைச்சரினால் ஈரானியத் தூதுவருக்கு

# பகலிலும் விளக்கை ஒளிரச்செய்யுங்கள்

### — காவல்துறை —



நாடு முழுவதும் பகல் வேளைகளில் மோட்டார் சைக்கிள்களின் பிரதான மின் விளக்கை ஒளிரச் செய்து போக்குவரத்தில் ஈடுபடுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேல் மாகாணத்தில் கடந்த மாதம் மேற்கொண்ட இந்த நடவடிக்கை வெற்றியளித்ததை தொடர்ந்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் கடந்த மாதம் இவ் ஒழுங்கை மீறிய 65 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹிந்த சிந்தனை...

புஞ்சிநிலமே தெரிவித்துள்ளார்.

இவ் வருடாந்த ஒன்றுகூடல் கடந்த 06.04.2014ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை திருகோண மலை பட்டினமும் சூழல் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான சுசந்தபுஞ்சிநிலமே தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு சங்கத்தின் பிரதம செயலாளர் தேசகீர்த்தி அஜித் ஜயசுந்தர மற்றும் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டதுடன் உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும், மனஉளைச்சல்கள் பிரச்சினைகள் பற்றியும் சங்கத்தின் எதிர்கால திட்டங்கள் பற்றியூம் கலந்துரையாடப்பட்டதுடன் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 11 பிரதேச செயலாளர் பிரிவில் இருந்தும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆலையில் அடிதடி....

சம்பளம் வழங்குவதற்கான.....
நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போது இரு தரப்பினரிடையே முறுகல் நிலை தோன்றியுள்ளது.

குறித்த கடதாசி ஆலையில் பணிபுரியும் 154 ஊழியர்களும் தமது சம்பளத்தைத் தருமாறு கோரி கடந்த ஜனவரி மாதம் இரண்டாம் வாரம் முதல் பணிபுறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ் ஆலையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தொழிலாளர் சங்கம், ஐக்கிய தேசியக் கட்சி தொழிலாளர் சங்கம், சுதந்திர வர்த்தக வலய பொது ஊழியர் சங்கம் ஆகிய மூன்று தொழிலாளர் சங்கங்கள் இயங்கி வருகின்றது.

குறித்த ஆலையின் ஊழியர்களது சம்பள நிலுவையை வழங்குவதற்காக அரசாங்கத்தால் மூன்று கோடி 'ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் எனினும் அதனை வழங்காது இரண்டு மாதத்திற்கான சம்பளம் மாத்திரம் வழங்குவதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதனை ஏற்றக்கொள்ள முடியாதெனவும் தமது முழு சம்பளத்தையும் வழங்குமாறு இரண்டு தொழிற்சங்கங்களை சேர்ந்த ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இன்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தொழிலாளர் சங்க உறுப்பினர்கள் பதினொரு பேருக்கு மாத்திரம் சம்பளம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், மற்றைய இரு சங்கங்களின் உறுப்பினர்களும் இதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இதன் பின்னர் இரு தரப்பினரிடையேயும் மோதல் ஏற்ப்பட்டுள்ளது.

இதன் போது காயமடைந்த இரண்டு பேர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 6 நாட் குழந்தை தெருவில்

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி தேற்றாத்தீவு பகுதியில் துணியினால் சுற்றப்பட்ட நிலையில் சிசு ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவிற்கமைய அக்குழந்தை குழந்தைகள் காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தேற்றாத்தீவு தேவாலயத்துக்கு அருகில் வீதியின் ஓரத்தில் துணிகளினால் சுற்றப்பட்ட நிலையில் குழந்தையொன்றின் அழு குரலைக்கேட்டு தேவாலயத்தில் நின்ற பெண்ணொருவர் சிசுவை மீட்டு தனது வீட்டுக்குக் கொண்டு சென்றுள்ளார்.

தகவலைப் பெற்றுக்கொண்ட களுவாஞ்சிகுடி காவல்துறையினர் அப் பெண்ணின் வீட்டுக்கு சென்று பொலிஸார் குழந்தையினை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சிசு பிறந்து ஆறு நாட்களேயான பெண் சிசு எனவும் மிகவும் நல்ல உடல் நிலையில் இருந்ததாகவும் தெரிகின்றது.

குறித்த குழந்தையின் பெற்றோரை தேடிவருவதாகவும் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருவதாகவும் களுவாஞ்சிகுடி காவல்துறையினர் தெரிவித்தனர்.

**உண்மையை உலகுக்குச் சொல்லக் கூடிய பத்திரிகையாளர்கள் மட்டக்களப்பில் தேவை - 075 4252042**




# அசத்தியவாதிகளை அடையாளம் காட்டும் சூனிய பத்வா

சூனியம் என்றொரு கலை உள்ளது. அது இஸ்லாத்தில் தடுக்கப்பட்டுள்ளது. சூனியத்தைக் கற்பது, கற்பிப்பது, செய்வது, செய்விப்பது அனைத்துமே குப்ரை ஏற்படுத்தும் கொடிய குற்றங்களாகும். அல்லாஹ்வின் நாட்டமின்றி சூனியத்தினால் யாரும் யாருக்கும் எவ்விதத் தீங்கையும் ஏற்படுத்திவிட முடியாது என்பது அஹ்லுஸ் சுன்னாவின் அகீதாவாகும்.


நாங்கள்தான் சத்தியத்தின் ஏகபோக உரிமையாளர்கள் என கூறித் திரியும் ஒரு கும்பல், 'சூனியத்தினால் அல்லாஹ் நாடினால் பாதிப்பு ஏற்படும்' என நம்புபவர்கள் முஷ்ரிக்குகளாவர். அவர்களுக்குப் பின்னால் தொழக் கூடாது. நபி(ஸல்) அவர்களுக்கு சூனியம் செய்யப்பட்டதை நம்புபவர்கள் முஷ்ரிக்குகள். சூனியத்தில் நுணுக்கமான ஷிர்க்குகள் இருக்கின்றன. இதை நாங்கள்தான் புதிதாகக் கண்டுபிடித்துக் கூறுகின்றோம்.

நாங்கள் சொன்ன விளக்கம் சென்றடையாதவர்கள் சூனியத்தை நம்பினால் முஷ்ரிக் இல்லை. சென்றடைந்தவர்கள் நம்பினால் முஷ்ரிக் என்றெல்லாம் உளறி வருகின்றனர்.

*அசத்தியவாதிகளை அடையாளம் காட்டும் பத்வா*

நபி(ஸல்) அவர்கள் காலத்தில் இல்லாத ஒரு விடயம் இப்போது உருவாகி இருந்தால் அதை ஆய்வு செய்து புதிய பத்வா கொடுக்கலாம். ஆனால் 'சூனியம்' என்ற சொல் நபியவர்களுக்கு முன்பிருந்தே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நபியவர்கள் காலத்திலும் இது பயன்படுத்தப்பட்டது. இதில் இவர்கள் புதிதாக ஆய்வு செய்து நுணுக்கமான ஷிர்க் இருப்பதைக் கண்டுபிடித்துவிட்டார்களாம்.

சூனியத்தை நம்புபவர்கள் சூனியக்காரனை அல்லாஹ்வாக ஆக்குகின்றனர் என்பது பொய் வாதம். இதுதான் அதனது அர்த்தம் என்றால் நபியவர்கள் அதனைச் சுட்டிக்காட்டி இருப்பார்கள்.



நபி(ஸல்) அவர்கள் கூறாத ஒரு கொள்கையைக் கூறுவதன் மூலமாக இவர்கள் கொள்கை ரீதியான பித்அத்வாதிகள் என்பதை நிரூபித்து வருகின்றனர்.

## ஹதீஸ்களை விமர்சிக்கும் இமாம்கள்

முதலாவது வழி:

- இமாம் தபரானி அவர்கள் அல் மு'ஜமுல் கபீர் (2÷98ல்) யசீத் இப்னு ரபீஆ அர் ரஹ்பி என்கிற அறிவிப்பாளர் மூலம் பதிவு செய்கிறார்கள். இவரைப் பற்றி இமாம் புகாரி (ரஹ்) கூறும்போது "இவரது செய்திகள் நிராகரிக்கப்படக் கூடியவை" என்கிறார்கள். (நூல் அத்தரீகுஸ் ஸகீர் 2÷146)
- இமாம் தாரகுத்னி (ரஹ்) இவர் பலவீனமானவர் என்கிறார் (அல்லுஹாபாஉ லித்தாரகுத்னி 398)
- இமாம் அபூ ஹாதம் (ரஹ்), இவர் பலவீனமாவர். ஹதீஸ் துறையில் நிராகரிக்கப்பட்டவர்
- இமாம் நஸாஈ (ரஹ்), இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி (ரஹ்), இவர் ஹதீஸ் துறையில் மறுக்கப்பட்டவர் என்கிறார். (அல்லுஹபாஉ 245, அல்லிஸான் 6÷286)

இரண்டாவது வழி:

- இச்செய்தியை இமாம் பைஹகி (ரஹ்) அவர்கள், தலாஇலுன் நபவிய்யா (2÷216)லும் இமாம் அபூ நுஐைம் (ரஹ்) ஹில்யா (1÷41)லும் இமாம் பஸ்ஸார் (ரஹ்) ஸவாஹிதுல் பஸ்ஸார் (3÷169)லும் பதிவு செய்துள்ளார்கள்.




# பிள்ளைகளைத் தனியாக தூங்கவிட வேண்டிய காலம்

இவர்களின் பிள்ளைகள் பகல் நேரங்களில் தாத்தா பாட்டியின் பராமரிப்பிலோ, அல்லது வீட்டோடு இருக்கும் வேலைக்காரிகளின் நேரடிப்பார்வையிலோதான் இருப்பார்கள். அதேநேரம் இரவு முழுக்க பெற்றோரின் அரவணைப்புக்குள் இருக்கும் வாய்ப்பு கிடைப்பதால் தங்கள் தனிமை ஈடுசெய்யப்பட்டு விட்டதாக திருப்திப்பட்டுக் கொள்வார்கள்.

சில பெற்றோர் தங்கள் கூடவே குழந்தையை படுக்கவைக்கும்போது குழந்தைகள் படுக்கையை ஈரப்படுத்துவதை விரும்புவதில்லை. அதனால் தங்களுக்கு எட்டும் தூரத்தில் குழந்தையை தொட்டிலிலோ, பெட்டிலோ படுக்கப் போட்டு விடுவார்கள். இம்மாதிரியான தள்ளி வைப்புக்குள்ளான குழந்தைகள் இரவில் பசித்து அழும்போது உடனடியாக தாயின் அனுசரணைக் குரல்



கேட்டால் தனிமையை உணர மாட்டார்கள். "குரல் கொடுத்ததுமே நம்மை கவனிக்க இங்கே நமக்கானவர்கள் இருக்கிறார்கள்" என்ற உணர்வு குழந்தைகள் மனதில் தங்கிப்போவதால், அவை அந்த குறைந்த பட்ச இடைவெளியை பொருட்படுத்துவதில்லை.

இதில்கூட பெற்றோருக்கு உணர்வுரீதியான ஒரு நெருக்கடி இருக்கிறது. குழந்தையை தங்கள் இருவருக்கும் இடையில் படுக்கவைப்பவர்கள் தங்கள் "இரவுநேர நெருக்கத்திற்கு" இடையூறாக இருக்கிறது என்று கருதவும் இடமுண்டு.

அந்த நேரத்தில் குழந்தை அழுது அவர்கள் தனிமையின் இனிமையை தகர்த்து விடுவதும் உண்டு. இதுபோக நடுநடுவே விழித்து அழும் குழந்தையால் அலுவலகம் போக வேண்டிய கணவரின் நிம்மதியான உறக்கம் தடைப்படுவதாக கவலைப்படும் சில தாய்மார்கள் குழந்தையை சற்றுத் தள்ளி படுக்கவைக்கும் எண்ணத்துக்குள் வந்து விடுகிறார்கள்.

தொடரும்...


# வெற்றிலை பூண்டு சாதம்

*தேவையான பொருட்கள்*

- வெற்றிலை - 3
- சீரக சம்பா அரிசி – 1 - 4 கிலோ
- பூண்டு - 5 பல்
- சோம்பு – 1 - 2 தே.கரண்டி
- பட்டை - 1 துண்டு
- நெய் - 1 மே.கரண்டி
- கறிவேப்பிலை - சிறிது
- ஸ்பெஷல் மசாலா - 2 மே.கரண்டி
- உப்பு - தேவைக்கேற்ப

*ஸ்பெஷல் மசாலாவுக்கு:*

- கருப்பு எள் - 1 தே.கரண்டி
- மிளகு - 1 கரண்டி
- சுக்குப் பொடி – 1 - 2 தே.கரண்டி
- மிளகாய் வற்றல் - 5
- மஞ்சள் - அரை இன்ச்
- உப்பு - தேவைக்கேற்ப



எல்லாவற்றையும் எண்ணெய் விடாமல் வறுத்துப் பொடியாக்கிக் கொள்ளவும்.

*செய்முறை*

அரிசியை உதிரியாக வேக வைத்துக் கொள்ளவும். பின்னர் தாச்சியில் நெய் விட்டு, பட்டை, சோம்பு வறுக்கவும். பூண்டு சேர்த்து வதங்க விடவும். வெற்றிலையை நறுக்கிச் சேர்க்கவும். ஸ்பெஷல் மசாலா பொடியும் உப்பும் சேர்த்து, தண்ணீர் தெளித்து வதக்கவும். வடித்த சாதம் சேர்த்துக் கிளறி, தீயைக் குறைத்து ஒரு கை தண்ணீர் தெளித்துக் கலந்து, மூடி வைக்கவும்.

3 நிமிடங்கள் கழித்துக் கிளறி இறக்கவும்.

# பொடுகை முற்றாக இல்லாமல் செய்ய

பொடுகு தொல்லை பலருக்கு பெரிய பிரச்சினையாக உள்ளது. தலையின் சருமம் வறண்டு போகவோ, எண்ணெய் வடியவோ விடுவதால் தலைமுடிகள் வறண்டு போவதோடு, பொடுகு வரவும் வாய்ப்புண்டு. இது குளிர் காலங்களில் அதிகமாகிறது. இதனால் தலையில் அரிப்பும் ஏற்படலாம். பொடுகு வராமலிருக்க அல்லது பொடுகை அகற்ற சில எளிய முறைகளை கீழே கொடுத்துள்ளோம்.

*காரணங்கள்*

ஜெல், ஸ்ப்ரே, ஷாம்பூ ஆகியவை அதிகமாக உபயோகிப்பது.

பர்மிங், கலரிங் ஆகியவற்றாலும் பொடுகு வரலாம்.

அடிக்கடி நீண்ட நேரத்திற்கு ஹேர் ட்ரையர் உபயோகிப்பது.

கவலை, டென்ஷன் அதிகமானால் ஷாம்பூ போட்ட பிறகு சரியாக முடியை அலசாமல் இருப்பது.

*நிவாரணங்கள்*

- ஆன்டி செப்டிக் தன்மை நிரம்பிய மூலிகைகளால் உருவான ஆயுர்வேத எண்ணெயை (அதில் வேப்பிலை, வெந்தயம், துளசி ஆகியவை கலந்தது) முடியின் வேரில் மென்மையாக அழுத்தித் தடவவும்.
- அந்த ஆயுர்வேத எண்ணெயை முழுத் தலையிலும் சீராகத் தடவவும்.
- வெந்நீரில் டவலை ஊற வைத்து, பிறகு நீரைப் பிழிந்து விடவும்.
- சீராக நீராவி முடிகளுக்குள் செல்லுமாறு அந்த டவலை தலையில் கட்டவும்.
- 5லிருந்து 10 நிமிடம் வரை அதை உலர விடவும்.

*பொடுகை அகற்றுவதற்கான ஒரு விஷேசமான கலவை*

ஒரு கப் மருதாணியில் நெல்லிக்காய், சீயக்காய், ஒரு தேக்கரண்டி, வெந்தயம், வேப்பிலை, துளசி அரை தேக்கரண்டி எல்லாவற்றையும் பொடியாக கலக்கவும், எல்லாவற்றையும் தயிரில் கலந்து அல்லது பாதி எலுமிச்சை துண்டின் சாறுடன் கலந்து ஒரு கலவையை தயார் செய்து கொள்ளவும். இதை தலை முழுக்கத் தடவி ஒரு மணி நேரம் வரை வைத்திருக்கவும்.

இப்பொழுது இந்த ஆயுர்வேத ஷாம்புவால் தலையை கழுவிக் கொள்ளவும். இதை வாரத்திற்கு ஒரு முறை என 3 மாதங்கள் வரை தடவவும்.



இதனால் நிச்சயமாக பொடுகு விலகும். இதற்குப் பிறகும் தலையில் பொடுகு ஏற்பட்டால் உங்கள் உடல் கோளாறுதான் இதற்குக் காரணம். எனவே உங்கள் மருத்துவரை கலந்து ஆலோசிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காவல்துறையின் சித்திரைப் புத்தாண்டு விழா

தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட காவல்துறைத் தலைமையகத்தினால் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழாவானது மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப் பட்டது.

முதல் நிகழ்வான மரதன் ஓட்டத்தினை கிழக்கு மாகாண சிரேட்ட பிரதிக் காவல்மா அதிபர் எம்.நந்தன முணசிங்க கொடியசைத்து ஆரம்பித்து வைப்பதனைப் படங்களில் காணலாம்.

(உ.உதயகாந்த்)

# சமூகச் சீர்திருத்தக்குழு உதயம்

மஹிந்த சிந்தனையின் பிரகாரம் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் பிரதேச செயலக மட்டத்தில் சமுக சீர்திருத்தக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

சிறைச்சாலைகளில் ஏற்படும் நெருக்கடிகள், செலவினங்கள் மற்றும் குற்றவாளிகளைக் குறைக்கும் நோக்குடன் இந்தச் சமுக சீர்திருத்தக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன் முதலாக கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் சமுக சீர்திருத்த குழு அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த 9ம் திகதி கோறளைப்பற்று பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி ரீ.தினேஸ் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு நீதிமன்ற சமுதாயம்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் எஸ்.தயானந்தன், கோறளைப்பற்று பிரதேச செயலக சமுதாயம்சார் அபிவிருத்தி உத்தியோகத்தர் ரீ.சுதாராஜ் மற்றும் சமுக சீர்திருத்த குழுக்களின் அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

# முதல் இலத்திரனியல் விளம்பரப்பலகை

(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கிலங்கை வரலாற்றில் முதல்தடவையாக இலத்திரனியல் விளம்பரப் பலகை மட்டக்களப்பு காந்தி பூங்கா அருகில் ஆசியா பவுண்டேசன் ஊடாக கொய்க்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஸ்தாபிக்கப்பட்டு மாநகர ஆணையாளர் எம்.உதயகுமார் தலைமையில் அண்மையில் திறப்புவிழா இடம்பெற்றது. நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி . பி.எஸ்.எம்.சாள்ஸ் இலத்திரனியல் விளம்பரப் பலகையினைத் திறந்துவைத்தார்.



# இந்து சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள புத்தக வெளியீடு


இந்துசமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பதிப்பிடப்பட்டு வெளியிடப்பட்ட மூன்று புத்தகங்களின் வெளீயீடு உவர்மலை விக்னேஸ்வரா கல்லூரியில் 04.04.2014ல் நடைபெற்ற போது இந்து சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன், இலங்கைத் தமிழ்ச்சாசனங்கள் பகுதி 2 இனை எழுதி வெளியிட்ட பேராசிரியர் சி.பத்மநாதன் (படம் 3) உட்பட சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளும் அதிதிகள்.

# சென்நெல் கிராம மீள் எழுச்சித் திட்டம்

(எம்.ரீ.எம்.பர்ஹான்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் சென்னல்கிராமம் இரண்டுக்குரிய மீள் எழுச்சி உட்கட்டமைப்பு வேலைத்திட்டத்தின் பெயரில் ஹம்ரா பாடசாலையின்முன் வடிகான் அமைக்கும் வேலைத்திட்டம் இன்று சம்மாந்துறை பிரதேசசபை தவிசாளர் அல்ஹாஜ் யு.ஆ.ஆ.நௌஷாத் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



# தேசிய சேமிப்பு வங்கியின் வெகுமதி

கதிரவன்

தேசிய சேமிப்பு வங்கி சேமிப்பு கணக்கில் ஆறு மாதங்களுக்கு மேலாக கணக்கு தொகையை பேணி வரும் வாடிக்கையாளர்கள் மரணிக்கும் தறுவாயில் அவர்களின் குடும்ப உரித்தினருக்கு உபகார கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றது. வாடிக்கையாளரின் சேமிப்பு கணக்கு மீதியின் சராசரி நிலுவையின் ஐந்து மடங்குகள் இவ்வாறு வழங்கப்படுகின்றது.

திருகோணமலை தேசிய சேமிப்பு வங்கி கிளையில் கணக்கு வைத்திருந்து அண்மையில் அமரத்துவம் அடைந்த கணக்காளர் இராசேந்திரம் அவர்களின் மனைவிக்கு கிளை முகாமையாளர் ஜே.சுவேந்திரன் உபகார தொகைக்கான ரூபாய் 75,000.00 காசோலையினை 09.04.2014 காலை வங்கியில் வைத்து வழங்கி வைத்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சர்வதேசச் செய்திகள்

# 44மில். அமெரிக்க டொலர்களை விழுங்கியும் வெளிவராத "விமானம்-370"

காணாமற்போயுள்ள மலேசிய விமானத்தைத் தேடும் பணிகளில் தற்போதுவரை செலிவிடப் பட்டுள்ளதொகை 44மில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும் விமானமொன்றைத் தேடும் பணியில் செலிவிடப்பட்ட அதி கூடிய தொகையாக விமானப் பறப்பு வரலாற்றில் இத் தொகை பதிவாகியும் உள்ளது.

அதேவேளை கடலடியைத் தேடும் அதியுயர் தொழில்நுட்ப சாதனங்களும் விமானத் தேடலுக்குப் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க இராணுவப் பாவனைக்கென உருவாக்கப்பட்ட "ப்ளுபின்-21" எனும் தன்னியக்கக் கடலடி வாகனம் பயன்படுத்தப்படவுள்ளது. கடலடியில் இரண்டரை மைல்கள் வரை சென்று தேடுதலை மேற்கொள்ளும் இவ்வாகனம் முதற்தடவையாக உலக வரலாற்றில் பயன்படுத்தப்படவுள்ளது.




# ஜப்பான் பிலிப்பைன்ஸ் உட்பட ஏனைய நேச நாடுகளையும் காப்போம்

சர்ச்சைக்குரிய ஆசியக் கடல் பிரதேசத்தில் சீனா தனது அண்டை நாடுகளுடன் முரண்பட்டுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் ஜப்பான், பிலிப்பைன்ஸ் உட்பட அப் பிராந்தியத்திலுள்ள ஏனைய நேச நாடுகளையும் அமெரிக்கா பாதுகாக்கும் என உறுதியளித்துள்ளது.

பிரச்சனைக்குரிய தீவுகளின் வான்பரப்பில் அமெரிக்காவுடன் இணைந்து வான்பாதுகாப்புப் பொறிமுறையை உருவாக்க சீனா தனது விருப்பத்தை வெளியிட்டபோது அதனை மறுத்துரைத்துள்ள அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் நேச நாடுகளை நோக்கி இந்த உறுதிமொழியை அளித்துள்ளார்.

# நீர்ப்பீடனத் தொகுதியை மீளக்கட்டி எழுப்பலாம்

வயதடையும் போது சிதிலமடையும் நீர்ப்பீடனத் தொகுதியால் உடலில் உள்ள இயற்கையான பாதுகாப்பு அரண் சிதைவடைந்து விடுகின்றது.

ஆனால் அண்மைய மருத்துவ ஆய்வொன்றின் ஊடாக அவ்வாறு சிதைவடையும் நீர்ப்பீடனத் தொகுதியை மீளக் கட்டியெழுப்ப முடியும் என விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

எடின்பரோ பல்கலைக்கழக ஆராய்சியாளர்கள் இவ்வாறு நீர்ப்பீடனக் கலங்களை உருவாக்கக்கூடய உடற்கலனைச் செயற்கையான வழியில் இயற்கையாக உருவாக்கும் ஆராய்ச்சியில் வெற்றிபெற்றுள்ளனர்.

# இந்தோயேசிய சனாதிபதி புதிய விமானம்

இந்தோனேசிய சனாதிபதிக்கான புதிய விமானத்தை அந்நாடு கொள்வனவு செய்துள்ளது.

கொள்வனவுக் கட்டளையின் பிரகாரம் கடந்த ஆண்டிலேயே பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவேண்டிய அவ்விமானத்திற்கு மேலும் புதிய சொகுசுகளை ஏற்படுத்தித்தருமாறு அந்நாட்டு அதிகாரிகள் விடுத்த வேண்டுகோளாலேயே தற்போது அவ்விமானம் வழங்கப்பட்டுள்ளதாக போயிங் விமானக் கம்பனி அறிவித்துள்ளது.

சனாதிபதிக்கென விமானம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதால் ஆண்டுக்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர்களை அந்நாடு சேமிக்கக்கூடியதாக இருக்கும் என அந்நாட்டின் வான்பறப்பு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

**நீங்களும் செய்திகளைத் தரலாம்**
**இரகசியம் காக்கப்படும்**
**075 4252042**

# “மஹிந்த சிந்தனை என்பது மக்களின் சேவை”



## பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் புஞ்சிநிலமே

(பஹ்மி யூஸுப்) (ஸ்ரீ)

மஹிந்த சிந்தனை என்பது மக்களிற்கான சேவை. அதை நிறைவேற்றுவதே உங்களின் கடமை என இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கக் கூட்டத்தில் பிரதி அமைச்சர் சுசந்த. 13


## மலைமுரசின் விளம்பரக் கட்டணம்

| அளவு | முன்புறம் | பின்புறம் |
|---|---|---|
| A 7 | 650.00 | 500.00 |
| A 6 | 1175.00 | 975.00 |
| A 5 | 2200.00 | 1900.00 |
| A 4 | 4150.00 | 3800.00 |
| A 3 | 7950.00 | 6950.00 |
| அளவு | பக்கம் 02 | பக்கம் 15 |
| A 7 | 350.00 | 200.00 |
| A 6 | 575.00 | 475.00 |
| A 5 | 1100.00 | 900.00 |
| A 4 | 1950.00 | 1500.00 |
| A 3 | 3450.00 | 2950.00 |

ஏனைய பக்கங்கள் - ரூ.18 சதுர அங்குலம்


# ஆலையில் அடிதடி

நூற்று ஐம்பத்திநான்கு ஊழியர்கள் கடந்த பலமாதங்களாகச் சம்பளம் பெற்றுக்கொள்ளாததால் போராடிவரும் நிலையில் பதின்மூன்று ஊழியருக்கு மட்டும் சம்பளம் வழங்க முற்பட்டபோது எழுந்த அடிதடியில் ஆலை ஊழியர் இருவர் காயங்களுக்கு இலக்காகி உள்ளனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலையின் தொழிற்சங்க உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த இரண்டு ஊழியர்கள் இன்று பிற்பகல் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.



கடந்த ஐந்து மாத காலமாக கடதாசி ஆலை ஊழியர்களுக்கான சம்பளம் வழங்கப்படாத நிலையில், தொழிற்சங்கம் ஒன்றின் ஊழியர் களுக்கு மாத்திரம் கடந்த 8ம் திகதி.. 13

# நித்திலம் சஞ்சிகை வெளியீடு


(பஹ்மி யூஸுப்)

திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் நித்திலம் சஞ்சிகையும் கௌரவிப்பு நிகழ்வும் இன்று 07.04.2014ஆம் திகதி திங்கட்கிழமை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் வலயக் கல்வி பணிப்பாளர் திரு.என்.விஜேந்திரன் தலைமையில் மிகச்..... 13



# “கிழக்கிலும் வடக்கிலும் அரச பயங்கரவாதம்”

## பாராளுமன்றத்தில் ஸ்ரீதரன்



கிழக்கும் வடக்கும் இன்று அரச பயங்கரவாதத்தின் அடக்குமுறைக்குள் தள்ளப்பட்டு விட்டுள்ளது என பாராளுமன்றத்தில் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார். “சமாதானம் பெற்றுக் கொடுக்கப்பட்டு விட்டதாக கூறப்படுகின்ற வடக்கும் கிழக்கும் தற்போது அரச பயங்கரவாதத்தின் அடக்குமுறைக்குள் தள்ளப் பட்டுள்ளது எனத் தெரிவித்த அவர் ஜெனீவாவில் நிறை வேற்றப்பட்டுள்ள தீர்மானமானது இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் இறுதி சந்தர்ப்பம் என்றும் தெரிவித்தார்.கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற திருத்தச் சட்ட விவாதத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# கிழக்கிலும் விசேட நீதிமன்றம்



பெண்கள் மற்றும சிறுவர்களுக்கு எதிராகப் புரியப்படும் குற்றங்களை விசாரிக்க விசேட நீதிமன்றங்களை மாகாணங்களெங்கும் உருவாக்கும் திட்டத்தின் கீழ் கிழக்கிலும் விசேட நீதி மன்றம் ஒன்று உருவாக்கப படவுள்ளது.

தற்போது கொழும்பு மற்றும் யாழப்பாணத்தில்

# சித்திரைப் பறுவம் மே 14ல்

வாக்கிய மற்றும் திருக்கணித பஞ்சாங்கங்களுக்கிடையில் எழுந்துள்ள முரண்பாட்டால் சித்திரைப் பறுவம் எப்போது என்ற சந்தேகம் எழுந்துள்ள நிலையில் அதனை இந்துக்கலாசார அமைச்சு தீர்த்துவைத்துள்ளது.

அதன்படி சித்திரைப் பறுவம் எதிர்வரும் 14ம் திகதி மே மாதம் வரும் பௌர்ணமியிலேயே அனுட்டிக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கில் நோர்வேயினர் மீன்வளர்க்க முயற்சி

கொடுவா வகை மீனைக் கிழக்கில் வளர்க்கும் முயற்சியொன்றில் நோர்வே முதலீட்டாளர்கள் ஈடுபட ஆர்வம் கொண்டுள்ளனர்.

இதற்கான முதற்கட்டக் கடல்வள ஆய்வை அண்மையில் நோர்வே முதலீட்டாளர்கள் குழுவொன்று நடாத்தி முடித்துள்ளது.

ஏற்கனவே குச்சவெளிப் பிரதேசத்தில் பரீட்சார்த்த நடவடிக்கையாக ஐநூறு கொடுவா மீன் இனக் குஞ்சுகளை வளர்க்கும் பணி தொடங்கியுள்ளது. அதனையடுத்து இத்திட்டத்தை கிழக்கின் ஏனைய பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லும் நோக்குடன் வருகை தந்திருந்த நோர்வே முதலீட்டாளர்கள் 13

# கிழக்கின் அமைச்சர் ஈரானியத் தூதுவருடன் சந்திப்பு




புதிய ஈரானியத் தூதுவர் ஹுஸைன் இப்ராஹிம் அவர்களைச் சந்தித்த கிழக்கின் விவசாய அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் கிழக்கின் அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளார். 13

புதுவருடத்தை முன்னிட்டு மலைமுரசின் வாசகர்களுக்கும் விடுமுறை..... அடுத்தவாரம் மட்டும் மலைமுரசு வெளிவராது..


விளம்பரம் செய்யுங்கள்
வியாபாரத்தைப் பெருக்குங்கள்
அழைபேசி - 075-2954733








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org